வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 17 வியாழக்கிழமை (30 03 - 2000) VALAMPURI ஒலி: 102

வடமராட்சி கிழக்கில்

மருதங்கேணி தாளையடி செம்பியன்பற்று

ராணுவப்பிரதேசங்கள்புலிகள்வசம்

ஆனைவிழுந்தானில் உக்கிர சமர்!

தந்திரோபாயம் கருதி படை வாபஸ்
பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(எமது விசேட நிருபர்)

வடமராட்சி கிழக்கில் தமிழீழ விடுதலைப்புலிகள் தொடுத்த உக்கிர மான தாக்குதலின் போது இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த சில பிர தேசங்கள் விடுதலைப் புலிகள் வசம்வந்துள்ளது.

மருதங்கேணி,தாளையடி,செம்பியன் பற்று ஆகிய முக்கியபிரதேசங் களே புலிகளின் வசம் வந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. பளை, ஆனைவிழுந்தான் பகுதிகளில் அணி திரண்டுள்ள பெண் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கு மிடையே ஆக்ரோஷமான போர் நடைபெற்று வருவதாக யுத்த முனைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே வேளை யுத்த தந்திரோபாய முறையில் மருதங்கேணியில் இருந்து இராணுவம் முற்றாக வாபஸ் பெற்றுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

வடமராட்சி கிழக்குப் பகுதிகளிலுள்ள மருதங்கேணி, தாளையடி, செம்பியன்பற்று ஆகிய இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் நேற்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்துள்ளது.

நேற்று மாலை வரையான 12 மணி நேர மோதல்களில் மேற்படி இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் தமது வசம் வந்து விட்டதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

இச்சண்டைகளில் தமது தரப்பில் 25 போராளிகள் உயிரிழந்ததாகவும் புலிகள் அறிவித்துள்ளனர்.

32 கிலோ மீற்றர் நீளமான வடமராட்சி கிழக்குக் கடற்கரைப் பகுதியில் ஒரு கிலோ மீற்றர் தூரம் மட்டுமே படையினர் வசமுள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(8 ஆம் பக்கம் பார்க்க)

உயிரிழந்த புலிகள் விபரம்

மட்டுவில்பகுதியிலும் ஓயாத அலைகள் 3 இராணுவ நடவடிக்கையின் போதும் புலிகள் தரப்பில் உயிரிழந்தவர்களின் பெயர் விபரங்களை புலிகள் அறிவித்துள்ளனர்.

அவர்களின் விபரம்வருமாறு:

★ மேஜர் மூத்தவன் (கிருஸ்ணன் கிருபாகரன் யாழ்ப்பாணம்)

★ மேஜர் பூமகன்புபழனி

[8ஆம் பக்கம் பார்க்க]

இன்றைய ஹர்த்தால் ஒத்திவைப்பு
சடல மீட்பு முயற்சி தொடர்கிறது

[யாழ்ப்பாணம்]

பளை ஆனைவிழுந்தான் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான ஓட்டோ சாரதி சிவலிங்கம் கணேசலிங்கத்தின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் நேற்றும் யாழ். நகரில் சோககீத இசையுடன் துக்கம் அனுஷ்டிகசப் ட்டது.

துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி

(8ஆம் பக்கம் பார்க்க)

மருதங்கேணி வைத்தியசாலையில்
ஷெல்தாக்கு 10 க்கு மேற்பட்டோர்காயம்

(புலோலி)

மருதங்கேணி அரசினர் வைத்திய சாலையில் ஷெல் விழுந்து வெடித்ததில் அங்கிருந்த 10 க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி சம்பவம் உட்பட மோதல் சம்பவங்களில் காயமடைந்த பலர் வைத்திய சாலைகளுக்கு வரமுடியாத

(8 ஆம் பக்கம் பார்க்க)

இருதரப்பினரும் அனுமதித்தாலே
காயமடைந்தவர்களை பார்க்கலாம்!

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு மற்றும் பளைப் பகுதி களில் காயமடைந்த நிலையில்சிக்கியுள்ள மக்களை பார்ப்பதோ அவர்களை வைத்தியசாலைக்கு அழைத்து வருவதோ மோதலில் ஈடுபட்டிருக்கும் இருதரப்பினரும் அனுமதிக்கும்பட்சத்திலேயே சாத்தியமாகும்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

★ மிருசுவில் தேவாலயங்களில்
உள்ள 200 குடும்பங்களுக்கு சமைத்த
உணவு வழங்க நடவடிக்கை

விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்கு மிடையே இடம்பெற்றுவரும் மோதல் சம்பவங்களைத் தொடர்ந்து சுமார் 200 குடும்பங்கள் அவ்விடங்களை விட்டுவெளியேறி மிருசுவிலில் உள்ள தேவாலயத்தில் தங்கியுள்ளனர்.

மிருசுவில் தேவாலயத்தில்

(8ஆம் பக்கம் பார்க்க)

பளையில் தங்கியுள்ள ஊழியர்கள்
பாதுகாப்பாகத் திரும்பிவர உதவுங்கள்
சொக்கலிங்கம் அவசர வேண்டுகோள்

பளைப்பகுதியில் தரித்து நிற்கும் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச்சொந்தமான மூன்று பஸ்களையும் ஐந்து ஊழியர்களையும் பாதுகாப்பாக மீட்டெடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை

(8ஆம் பக்கம் பார்க்க)

வடமராட்சி கிழக்கில்

தொடரும் பதற்ற நிலையால்
பெருமளவு மக்கள் இடம் பெயர்வு

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த மாமுனை செம்பியன்பற்று ஆகிய பகுதிகளில் தொடரும் பதற்ற நிலையை அடுத்து இப்பகுதி மக்கள் குடத்தனை மணற்காடு ஆகிய பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

உறவினர் வீடுகள் ஆலயங்கள் மற்றும் பொது இடங்

(8 ஆம் பக்கம் பார்க்க)

இளைஞன் உயிரிழப்பு

(மன்னார்)

கடந்த ஞாயிற்றுக்கிழமை நானாட்டான் மன்னாரில் இளைஞன் ஒருவர் இராணுவ விசேட அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டாரென பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞர் தமிழீழ விடுத

(8 ஆம் பக்கம் பார்க்க)

மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

புத்தூர் குமாரசாமி வீதியைச் சேர்ந்த பேக்கரி ஊழியரான யோகநாதன் பிரபாகரன் (வயது20) அதே இடத்தைச் சேர்ந்த பேக்கரி உரிமையாளரான இரத்தினம் சந்திரகுமார் (வயது24) அகியோர் கடந்த செவ்வாய்க் கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பனிக்கர்லேன் திருநெல்வேலியைச் சேர்ந்த இராஜகாரியர் சுதர்சன்

[8ஆம் பக்கம் பார்க்க]

வடமராட்சி கிழக்கில்

யுத்தகளத்தில் உள்ள சடலங்களை
மீட்பதற்கு 'டக்ளஸ்'தீவிர முயற்சி

(யாழ்ப்பாணம்)

பளைஆனைவிழுந்தான்பகுதியில்இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் கொல்லப்பட்ட குழுதையைப் பிரசவித்த இளம் தாய், அவரது கணவன் ஓட்டோ சாரதி ஆகிய மூவரது சடலங்களையும் யுத்த களத்தில் இருந்து மீட்பதற்கு ஈ. பி.டி.பி செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட எம்.

(8ஆம் பக்கம் பார்க்க)

வடமராட்சி கிழக்கில்

இறந்த,காயமடைந்தவர்களுக்கு
50ஆயிரம்ரூபா வழங்கக் கோரிக்கை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சிகிழக்குப் பகுதிகளில் காயமடைந்தவர்களுக்கும் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களுக்கும் 50ஆயிரம் ரூபாவை உடனடியாக வழங்க வேண்டும் என்ற தீர்மானம் பருத்தித்துறைப் பிரதேசசபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பருத்தித்துறை *பிரதேச

(8 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

சின்னஞ்சிறு விளம்பரம்

பலம்மிக்க யந்திரங்கள்

ஆலயங்களுக்கும், இல்லங்களுக்கும், வியாபாரஸ்தாபனங்களுக்கும் பலம்மிக்க லக்ஷ்மி கடாட்ச யந்திரங்கள் மற்றும் தோஷ, கடன் தொல்லை, பயம், தடைகள், வெளிநாடு செல்வோர்க்கு பாதுகாப்பு ஆகிய பலவற்றிற்கும் அவரது நட்ஷத்திரம், பெயர், ஊர்அல்லது கிராமம் இவைகளை கணித்து மந்திராலய மகானின் அருள் ஆசியுடன்தரப்படும். வேண்டுபவர்கள் ஸ்ரீராகவேந்திர மருத்திக்கா 159A, கோயில் வீதி, நல்லூர் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

சாஸ்த்திர ஞான பண்டித ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் மகிமையால் ஆண், பெண் இருபாலார்க்கும் இருக்கும் திருமண தடங்கல், வெளிநாடு செல்ல தடையாக இருக்கும் கிரக சேர்க்கை, தீராத நோய், தொழில் வியாபார ஸ்தாபனங்களில் இருக்கும் பிரச்சினைகள் இன்னும் பலவற்றிற்கும் ஜாதக கணிப்புடன் பரிகாரங்கள் சாந்தி அறிவுரைகள் பெற்றுக் கொள்ளலாம்.

ராகவேந்திரசிவா

(இராசி பலன்)

30.03.2000
வியாழக்கிழமை
(தமிழுக்கு பங்குனி - 17)

தசமி இரவு 11.09 வரை, உத்தராடம் காலை 10.28 வரை, சித்தயோகம். இராகு காலம் பகல் 2.13 முதல் 3.43 வரை, சுபநேரம் காலை 8.10 முதல் 9.40 வரை.

மேடம்:
நண்பர் கலகலப்பு, தொழில் உறவு. தியாகசிந்தை.

இடபம்:
சபையோர் பாராட்டு, காரியசித்தி, மன அமைதி.

மிதுனம்:
வாய்ப்புநழுவுதல், பண முடை, அலைச்சல்.

கடகம்:
உள்ளக்குமுறல், பெண் பகை, தாயர் துயர்.

சிங்கம்:
தெய்வீகசிந்தனை, கடின வேலை, பயண ஏற்பாடு.

கன்னி:
நியாயம் கற்பித்தல், தொழில் முயற்சி, வாதத் திறமை.

துலாம்:
முயற்சிபாதகம், வழிப் பயம், அன்னியப்படல்.

விருச்சிகம்:
முக்கியமுடிவு, தொழில் சிறப்பு, திட்டமிடல்.

தனுசு:
அராஜகப்போக்கு, குற்ற உணர்வு, சங்கடமானநிலை.

மகரம்:
வாய்ப்பு கிட்டல், மனைவி பெருமை, அதிக பிரசங்கம்.

கும்பம்:
விட்டுக்கொடுக்காமை, காணித்தகராறு, வீண் செலவு.

மீனம்:
தேர்வில்சித்தி, குதூகலம், தெய்வீகச்செலவு.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

-அனுஷியா

பயண அனுமதி வழங்கப்பட்டோர்

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு இம்மாதம் 29 ஆம் திகதிவரை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவுஇலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாகத் தரப்படுகின்றது.

யாழ்ப்பாணம்

122482	ஏ	124773	ஏ	140409	ஏ	140412	ஏ
126666	ஏ	126969	ஏ	140415	ஏ	140416	ஏ
128429	ஏ	130123	ஏ	140417	ஏ	140418	ஏ
130123	பி	130293	ஏ	140422	ஏ	140422	பி
130437	ஏ	131335	ஏ	140422	சி	140428	ஏ
131335	பி	131335	சி	140439	ஏ	140439	பி
131991	ஏ	131991	பி	140441	ஏ	140445	ஏ
132141	ஏ	132141	பி	140448	ஏ	140448	பி
132141	சி	132141	டி	140448	சி	140448	டி
132141	ஈ	132141	எவ்	140448	ஈ	140451	ஏ
132269	ஏ	132269	பி	140453	ஏ	140454	ஏ
132291	ஏ	132291	பி	140455	ஏ	140456	ஏ
132291	சி	132291	டி	140457	ஏ	140457	பி
132291	ஈ	132291	எவ்	140458	ஏ	140459	ஏ
132333	ஏ	132333	பி	140465	ஏ	140469	ஏ
132423	ஏ	137083	ஏ	140472	ஏ	140475	ஏ
137217	ஏ	137230	ஏ	140483	ஏ	140483	பி
137300	ஏ	137315	ஏ	140485	ஏ	140492	ஏ
137339	ஏ	137359	ஏ	140493	ஏ	140494	ஏ
137377	ஏ	137377	பி	140494	பி	140495	ஏ
137377	சி	137377	டி	140495	பி	140497	ஏ
138695	ஏ	138708	ஏ	140498	ஏ	140502	ஏ
138709	ஏ	138711	ஏ	140503	ஏ	140506	ஏ
138711	பி	138711	சி	140506	பி	140506	சி
138711	டி	138711	ஈ	140506	டி	140506	ஈ
138713	ஏ	138713	பி	140509	ஏ	140514	ஏ
138713	சி	138803	ஏ	140523	ஏ	150523	பி
138803	பி	138805	ஏ	140524	ஏ	140524	பி
138821	ஏ	138858	ஏ	130524	சி	140524	டி
138863	ஏ	138873	ஏ	140525	ஏ	140529	ஏ
138897	ஏ	138897	பி	140534	ஏ	140535	ஏ
138897	சி	138922	ஏ	140536	ஏ	140536	பி
138922	பி	138923	ஏ	140536	சி	140538	ஏ
138930	ஏ	138936	ஏ	140538	பி	140538	சி
138936	பி	138936	சி	140539	ஏ	140547	ஏ
138936	டி	138937	ஏ	140562	ஏ	149564	ஏ
138937	பி	138955	ஏ	140564	பி	140571	ஏ
138957	ஏ	138965	ஏ	140572	ஏ	140577	ஏ
138965	பி	138969	ஏ	140577	பி	140578	ஏ
138985	ஏ	138985	பி	140578	பி	140580	ஏ
138985	சி	138988	ஏ	140583	ஏ	140587	ஏ
139002	ஏ	139010	ஏ	140588	ஏ	140596	ஏ
139014	ஏ	139024	ஏ	140597	ஏ	140597	பி
139033	ஏ	139034	ஏ	140598	ஏ	140602	ஏ
139048	ஏ	139048	பி	140609	ஏ	140622	ஏ
139048	சி	139049	ஏ	140624	ஏ	140625	ஏ
139050	ஏ	139056	ஏ	140625	பி	140630	ஏ
139062	ஏ	136064	ஏ	140643	ஏ	140643	பி
139068	ஏ	139068	பி	140648	ஏ	140658	ஏ
139068	சி	139068	டி	140658	பி	140658	சி
139076	ஏ	139080	ஏ	140658	டி	140658	ஈ
139080	பி	139081	ஏ	140658	எவ்	140658	ஜி
139081	பி	139081	சி	140659	ஏ	140659	பி
139081	டி	139082	ஏ	140659	சி	140660	ஏ
139082	பி	139084	ஏ	140660	பி	140660	சி
139084	பி	139085	ஏ	140660	டி	140660	ஈ
139085	பி	139086	ஏ	140672	ஏ	140689	ஏ
139086	பி	139088	ஏ	140690	ஏ	140697	ஏ
139091	ஏ	139100	ஏ	140698	ஏ	140700	ஏ
139106	ஏ	139106	பி	140718	ஏ	140719	ஏ
139108	ஏ	139116	ஏ	140720	ஏ	140724	ஏ
139116	பி	139122	ஏ	140743	ஏ	140753	ஏ
139122	பி	139124	ஏ	140754	ஏ	140763	ஏ
139135	ஏ	139135	பி	140765	ஏ	140766	ஏ
139142	ஏ	139142	பி	130767	ஏ	140768	ஏ
139162	ஏ	139166	ஏ	140771	ஏ	140774	ஏ
139166	பி	139169	ஏ	129788	ஏ	140788	பி
139170	ஏ	139170	பி	140788	சி	140822	ஏ
139170	சி	129171	ஏ	140851	ஏ	140851	பி
139176	ஏ	139177	ஏ	149533	ஏ		
139177	பி	139177	சி				
139177	டி	139180	ஏ				
139180	பி	139928	ஏ				
140381	ஏ	140382	ஏ				
140384	ஏ	140384	பி				
140384	சி	140385	ஏ				
140387	ஏ	140387	பி				
140387	சி	140393	ஏ				
140393	பி	140395	ஏ				
140395	பி	140397	ஏ				
140400	ஏ	170400	பி				
140400	சி	140401	ஏ				
140401	பி	140403	ஏ				
140406	ஏ	140406	பி				

நல்லூர்

123308	ஏ	123308	பி
128810	ஏ	128810	பி
130494	ஏ	130494	பி
130494	சி	131980	ஏ
131980	பி	132285	ஏ
137369	ஏ	137369	பி
137369	சி	138168	ஏ
138168	பி	138168	சி
138168	டி	138168	ஈ
138723	ஏ	138981	ஏ
139012	ஏ	139012	பி
139016	ஏ	139059	ஏ
139059	பி	139059	சி
139779	ஏ	139779	பி
139779	சி	139779	டி
140460	ஏ	140460	பி
140460	சி	140528	ஏ
140528	பி	140537	ஏ
140591	ஏ	140769	ஏ
140769	பி	140769	சி
140769	டி	140769	ஈ

யாழ்.நுகர்வோர்பாதுகாப்புச் சங்கம்

விசேட கூட்டம்

பாணின் விலை, நிறை தொடர்பானது.
அங்கத்தவர்கள், ஆர்வலர்கள் தவறாது கலந்து கொள்க.
இடம்:-19, அரசடி வீதி, வண்ணார்பண்ணை.
காலம்:-வியாழக்கிழமை(30-03-2000)மாலை 4.00மணி.

செயலாளர்,
யா.நு.பா.சங்கம்

(267)

வடமராட்சியில் மலேரியா தடுப்பு பிரிவினரின் சிகிச்சை முகாம்கள்

வியாழனன்று நடைபெறும்

(மந்திகை)

மலேரியா தடுப்புப் பிரிவினர் மருத்துவ வசதி குறைந்தபிரதேசங்களில் எதிர்வரும் 30 ஆம் திகதி சிகிச்சை முகாம் ஒன்றினை நடாத்த விருப்பதாக சுகாதார விரிவாக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உடுப்பிட்டி கம்பர்மலை தொண்டமனாறு துன்னாலை குடவத்தை ஆகிய இடங்களில் மேற்கொள்ளவிருப்பதாக இம்முகாம்கள் செயற்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. ஊய்ச்சலால் பீடிக்கப்பட்ட மற்றும் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெறமுடியாதவர்களுக்கு இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சிகிச்சை அளிக்கப்படவிருக்கிறது.

இச்சேவைமூலம் வறிய மக்கள் பெரிதும் நன்மையடைவரென எதிர்பார்க்கப்படுகிறது.

(சி-23)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஏ, பி. சி. பிரிவுச் சுற்றுப்போட்டி

ஏப்-1இல் ஆரம்பம்

(ஈச்சமோட்டை)

யாழ். உதைபந்தாட்ட லீக் நடாத்தும் ஏ.பி.சி. பிரிவுகளுக்கான (1999/2000) சுற்றுப்போட்டி பற்றி அறிவிக்கப்படுகிறது.

இறுதிச் சுற்றில் 'ஏ' பிரிவில் யாழ். பல்கலைக்கழகம், சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம், சென். அந்தனிஸ் விளையாட்டுக் கழகம், பாடும்மீன் விளையாட்டுக் கழகம், ஆகியனவும் 'பி' பிரிவில் சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம், சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம், சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம், கலைவாணி விளையாட்டுக் கழகம் ஆகியனவும் கலந்து கொள்கின்றன.

ஏப்ரல் 1 ஆம், 2 ஆம், 8 ஆம், 9ஆம், 15ஆம், 16ஆம் திகதிகள் மேற்படி போட்டிகள் உரும்பிராய் இந்துக் கல்லூரிவிளையாட்டு மைதானத்தில் நிகழவுள்ளன.

போட்டிக்குழுத் தலைவர் எஸ். கிளிபேட் அன்ரனிப் பிள்ளை, உதைபந்தாட்ட லீக் தலைவர் எஸ்.ரி. கணநாதன், போட்டிக் குழுச் செயலாளர் கே. நியூட்டன் உதைபந்தாட்ட லீக் செயலாளர் எம். பிரான்சிஸ் ஆகியோர் மேற்படி சுற்றுப் போட்டிக்கான விரிவான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

(சி-59)

பூட்டப்பட்டசைக்கிள் மர்மமறைவு யுவதிகள் வலைவீசி தேடுதல்

யாழ். நகரில் சம்பவம்

(அரியாலை)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் பூட்டப்பட்ட சைக்கிள் ஒன்று மர்மமானமுறையில் திருடப்பட்ட சம்பவம் கடந்த 27ம் திகதி இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம்பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

ஸ்ரான்லி வீதியிலுள்ள கடையொன்றின் முன்னால் சைக்கிளை நிறுத்தி விட்டு உள்ளே சென்று திரும்பிய யுவதிகளின் சைக்கிள்மாயமானது.

யாழ்.நகரில் சைக்கிள் திருட்டுகள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பூட்டிய சைக்கிள்கள் கூட மாயமாய் மறைவதாக மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

(க-106)



தவக்கால சிந்தனை

23 ஆம் நாள்

என்று தணிந்திடும் நம் சுதந்திர தாகம். மனிதன் வறுமைப்பிடியிலிருந்து விடுதலை பெற உணவு உற்பத்தியைப் பெருக்கினான். வறுமை ஒழிப்பவில்லை. நோயிலிருந்து விடுதலை பெற மருந்துகளைக்கண்டு பிடித்தான். நோய்கள் தீர்ந்தபாடில்லை.

தனிமை, வெறுமை இவற்றிலிருந்து விடுதலைபெற பொழுது போக்குச் சாதனங்களைக் கண்டுபிடித்தான். மனதில் அமைதியில்லை. யுத்தத்திலிருந்து விடுதலை பெற நவீன ஆயுதங்களை உற்பத்திசெய்தால் யுத்தம் ஓயவில்லை ஆனால் இயேசு சொல்கிறார்.

"தனக்கு எதிராக தானே பிளவுபடும் எந்த அரசும் பாழாய்ப் போகும். அவ்வாறே பிளவுபடும் வீடும் வீழ்ந்து விடும். என்னோடு இராதவன் எனக்கு எதிராக இருக்கின்றான். என்னோடு இணைந்து மக்களைக் கூட்டுச் சேர்க்காதவன் அவர்களை சிதறடிக்கின்றான்.

எனவே நாம் அமைதியைப் பெற விடுதலை அடைய எம் தாய்த்திருச் சபையின் வழி நின்று ஒன்றுபட்ட கிறிஸ்தவர்களாய் ஆதிக்கிறிஸ்தவ சமுதாயம் போல் பகிர்ந்து வாழ்வதன் மூலம் ஆண்டவன் இயேசுவில் தணிந்திடும் நம் சுதந்திர தாகம்.

மரியா
இளவாலை

3200 இ. போ. ச. ஊழியர்கள்

நஷ்டஈடு பெறுவர் என அறிவிப்பு

ஐ. தே. க. ஆட்சியில் பதவியிழந்தவர்கள்

(கொழும்பு)

ஐ. தே. க. ஆட்சிக் காலத்தில் அரசியல் பழிவாங்கல் காரணமாகப் பதவியிழந்த இலங்கைப்போக்குவரத்துச் சபை ஊழியர்கள் 3200 பேருக்கு எதிர்வரும் தமிழ், சிங்களப் புத்தாண்டுக்கு முன்பாக நஷ்டஈடு வழங்கப்படும் என்று போக்குவரத்து நெடுஞ்சலைகள் அமைச்சர் ஏ. எச். எம். பௌஸி தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்துக்கென 98 மில்லியன் (ஒன்பது கோடியே எண்பது இலட்சம் ரூபா) ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளானோர் தொடர்பான குழுவின் சிபார்சுக்கு எற்பவே இவர்களுக்கு நஷ்டஈடுவழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சரவையின் அங்கீகாரமும் இதற்குப் பெறப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (சி)

தாவடிஇந்து மயானத்தில் துர்நாற்றம் பொது மக்கள் தரப்பில் அதிருப்தி

தாவடி இந்துமயானத்தில் கடந்த மாரிகாலத்தின் பின்பு தற்போது பெரும் துர்நாற்றம் வீசுவதாக பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

ஆடு, மாடுகளின் கழிவுகள், மற்றும்எலும்புகள் போன்றனதாராளமாக இப் பகுதியில்வீசப்படுவதாலேயே இவ்வாறு துர்நாற்றம் வீசுவதாவும் மேலும்தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளையில்இப்பகுதி புதர்மண்டி பெரும்பற்றைக் காடுபோல் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

[க-49]

வடமராட்சி கிழக்கில்

பாடசாலைகள் முற்றாக செயல்இழப்பு கல்விகற்க முடியாதநிலையில் மாணவர்

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த உடுத்துறை, மருதங்கேணி, தாளையடி, பிசம்பியன்பற்று, மாமுனை, ஆழியவளை ஆகிய பகுதிகளில் இயங்கிவந்த பாடசாலைகள் முற்றாக செயல் இழந்துள்ளன.

இப்பகுதிகளை கடமையாற்றும் ஆசிரியர்கள், கல்வி வலயத்திற்குசென்று கடமை புரிந்து வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் அம்பன், குடத்தனை, மணற்காடு ஆகிய பகுதிகளை கணிசமானஅளவு ஆசிரியர்கள் வருகை புரிவதாகவும் தெரியவருகிறது. (க-42)

பளைப்பகுதி சென்றோர் மீளாததால் பெற்றோர்,உற்றார் பதைபதைப்பு

பளைப்பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்கும் இடையே நடைபெற்றுவரும் சண்டையின் விளைவாக அப்பகுதிக்கு பல்வேறு அலுவல்கள் நிமித்தம் சென்றவர்களில் குறிப்பிடத்தக்கோர் தத்தம் இடங்களுக்கு இன்னமும் திரும்பிவரவில்லைஎனத் தெரிவிக்கப்படுகிறது.

வலிகாமம் பகுதியிலிருந்து பொச்சுமட்டை கட்டிவருவதற்கு லான்மாஸ்டர்களில் சொன்றோரும் கூட இதில் அடங்குவர்.

தம் உறவினர்கள், பிள்ளைகள் மீண்டும் வருவதில் ஏற்படும் தாமதத்தால் பல்வேறு கற்பனைகளில் மூழ்கி சம்பந்தப்பட்ட குடும்பத்தினர் சண்ணீரும், கம்பலையுமாகக்காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. (சி)

மாதகல் பனிப்புலத்தில் மினி சூறாவளி ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலயம் சேதம்

மாதகல் பனிப்புலம் பகுதியில் கடந்த 27 ஆம் திகதி அதிகாலை வீசிய மினி சூறாவளியினால் பாணாவெட்டி ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலயம் பலத்த சேதத்திற்குள்ளானது.

ஆலயத்தின் மடப்பள்ளி, மற்றும் முன்பகுதி. ஓடுகள் தூக்கி வீசப்பட்டுள்ளதாகவும் சில பகுதிகள் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப் படுகிறது.

குறிப்பிட்ட ஆலயம் வன்செயல்கள் மற்றும் இடம் பெயர்வையடுத்து அண்மையில் புனரமைப்புச் செய்யப் பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ் ஆலயத்திற்கு ஏற்பட்ட சேதவிபரங்கள் மற்றும் அவைதொடர்பாக வழங்கவேண்டிய நட்டஈடு உடன் வழங்குமாறு கோரி மேற்படி ஆலய இந்துபரிபாலனசபையினர் மற்றும் பொது அமைப்புக்கள்பல, சண்டிலிப்பாய் பிரதேச செயலருக்கு விண்ணப்பித்துள்ளன. (க-120)

மாணவர்களும் கணனிப்பயிற்சியை இலகுவாகப் பெறுவதற்கு முயற்சியாம்

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஏற்பாடு

(அரியாலை)

பாடசாலை மாணவர்களின் நன்மைகருதி அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் கணனிப்பயிற்சி நிலையம். பாடசாலை மாணவர்களுக்கான கணனி அறிமுகப் பயிற்சிநெறித்திட்டம் ஒன்றை ஆரம்பிக்கஉள்ளது.

மூன்றுமாதகாலம் மாலை வேளைகளிலும், சனி, ஞாயிறு விடுமுறை தினங்களிலும்நடைபெறுஇம்பயிற்சி நெறிக்கு 8 தொடக்கம் 16 வயது வரையுள்ள சிறுவர்கள் விண்ணப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சிக்கட்டணமாக ரூபா 1000 அறவிடப்படும். மேலதிக விபரங்களை 160, 4 ஆம் குறுக்குத்தெரு எனும் முகவரியில் பெற்றுக்கொள்ளமுடியும்எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி பயிற்சிநிலையத்தின் இலவசப் பயிற்சி நெறித்திட்டத்தின் கீழ், அதிபரின் சிபாரிசுடன் அனுப்பப்படும் விண்ணப்பங்களிலிருந்து 28 மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர் எனவும் மேலும் தெரிவிக்கப் படுகிறது. (க-106)

தடகள விளையாட்டுப் போட்டி

[இணுவில்]

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகப் பிரிவிற் குட்பட்ட பகுதியில் இளைஞர் சம்மேளனம் நடாத்தும் தடகள விளையாட்டுப் போட்டி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் இன்று மாலை நடைபெறும்.

நாளை பிற்பகல் 2.30 மணியளவில் தெரிவு நிழ்ச்சிகள் இடம்பெறும்.

இறுதி நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்று சான்றிதழ்கள் வழங்கப்படும். [க-49]

சிறுகதைப் போட்டி

(கொழும்பு)

மறைந்த முற்போக்கு எழுத்தாளர் எஸ். அகஸ்தியர் நினைவாக தினகரன் வாரமஞ்சரி மற்றும் கண்டிமக்கள் கலை இலக்கியம் என்பன ஒன்றிணைந்து சிறுகதைப் போட்டி ஒன்றினை நடாத்த உள்ளன.

இலங்கைப் பிரஜைகளான தமிழ் பேசும் எழுத்தாளர் எவரும் இப்போட்டியில் கலந்து கொள்ள முடியும்.

இச்சிறுகதைகள் ஆசிரியர் தினகரன் ஆசிரியர் பீடம், லேக்ஹவுஸ் கொழும்பு - 10 என்ற முகவரிக்கு த்திரை 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பல் வேண்டும்.

இளம் குடுப்பஸ்தர்காயம்

ஈச்சமோட்டை

மதுபோதையில் மோட்டார் சைக்கிள் ஓட்டிவந்த இளம் குடும்பஸ்தர், கட்டுப்பாட்டை இழந்து மதிலுடன் மோதியதில் படுகாயமடைந்தார்.

கொய்யாத் தோட்டத்தைச் சேர்ந்த ரவி என்பவரே படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளவராவார்.

(உ-59)

நினைவுதினம் அனுட்டிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சிவானந்தர் சிறுவர் பாடசாலையின் போஷகரான சச்சிதானந்த சிவானந்த மாதாஜியின் நினைவு நாள் எதிர்வரும் 1 ஆம் திகதி யாழ். திவ்ய ஜீவனசங்க மண்டபத்தில் இடம்பெறும்.

காலை 9 மணிக்கு திருவடி பூசை அபிசேகத்துடன் இடம் பெறும் இந்நிகழ்வில் அமரர் கனகலிங்கம், சுந்தாலிங்கத்தின் நினைவஞ்சலியுடன் இடம்பெறும். (க)

வட-கிழக்கு மக்களின் ஒரேசொத்து கல்வியே; சீர்கெட்டு விடக்கூடாது

பிரதிமந்திரி ஹிஸ்புல்லாஹ் பேச்சு

(கொழும்பு)

'வடக்கு-கிழக்கு மாகாண மக்களுக்குக் கல்வியைத் தவிர வேறுஎந்தசொத்தும் இல்லை. அவர்கள் எதிர் காலத்திற்காகக் கல்வியைத் தான் நம்பிஇருக்கிறார்கள்'

இவ்வாறு தபால்த்தொலை தொடர்புகள் மற்றும் தொடர்புசாதனப் பிரதியமைச்சர் எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் கூறியிருக்கிறார்.

'மேற்படி மாகாணங்களில் 4000 ஆசிரியர் வெற்றிடங்கள் உளளன. இதனால் மாணவர்களின் கல்விபாதிக்கப்படும். இவ்வெற்றிடங்களை நரப்பஉடன் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். அதற்குத்தேவையான நிதியிருக்கிறது' என்றும் அவர்மேலும் தெரிவித்தார். (சி)

ரயில் மிதிபலகைப் பயணம் இரு இளைஞர்க்கு எமனானது

வெள்ளவத்தையில் சம்பவம்

(கொழும்பு)

ரயில் மிதி பலகையில் பயணம் மேற் கொண்ட இரு இளைஞர்கள் அடுத்த தண்டவாளத்தில் வந்து கொண்டிருந்த ரயிலுக்கிடையில் வீழ்ந்து மரணமான சம்பவம் ஒன்று வெள்ளவத்தையில் நிகழ்ந்துள்ளது.

காலியிலிருந்து கோட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயிலில் இளைஞர் கோஷ்டி ஒன்று விதிமுறைக்கு ஒவ்வாத வகையில் மிதி பலகைப் பயணத்தை மேற் கொண்டனர்

அவ்வேளையே இவ்விபத்து நிகழ்ந்தது.

இவர்களில் இருவர் அவ்விடத்திலேயே பரிதாபமாகப் பலியாகினர். மற்றொருவர் கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (சி-உ)

'உயிர் கொல்லி' தயாரிப்பு, விற்பனை புதிய உத்திகளில் தீவிர முனைப்பு

[யாழ்ப்பாணம்]

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் குறிப்பாக குக்கிராமங்களில் மக்களின் குடல் எரிந்து, ஈரல் கருகி, மனநோய் நிலை உருவாகி, குடும்பம் மற்றும் சமூக சண்டைகளுக்கெல்லாம் முக்கிய காரணியாக இருக்கும் உயிர் கொல்லியான கசிப்பு உற்பத்தி, விற்பனை என்பவற்றினை முற்றாக ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் மேலும் முனைப்புப் பெற வேண்டுமென வலியுறுத்தப் படுகிறது.

பொது அமைப்புகள் கிராம சேவகர்கள், படையினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கை மூலம்இக்கொடுமை குறிப்பிடத்தக்களவு கட்டுப் பாட்டுக்குள் வந்துள்ளது. எனக் கூறப்படுகின்ற போதிலும் புதிய புதிய உத்திகள் வகுத்து சுடுநீர்ப் போத்தல், கேற்றில் போன்றவற்றில் ஊற்றி வைத்து கசிப்பு விற்பனை செய்வோர் தொகையும் பெருகிவருவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. கூடுதலாக பெண்களே இவ் விற்பனையில் ஈடுபட்டு வருவதால் அவர்களது ஜீவனத்திற்கு சிறுகைத்தொழில் முயற்சிகளைச் சமூக அமைப்புகள் ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் இவ்வழி போக்கலாம் என தெரிவிக்கப் படுகிறது.

இதன் மூலம் இலாபகரமான சிறுகைத்தொழில் என வர்ணிக்கப்படும் கசிப்பு மூலமான கேட்டினைக் களைய வாய்ப்புக் கிடைக்கும் எனவும் நம்பிக்கைவெளிப்படுத்தப்படுகிறது. (சி)

"ஜனாதிபதியின் கல்வித்தகைமை அறிய முனைந்ததால் ஏற்பட்ட சர்ச்சை"

(கொழும்பு)

ஜனாதிபதி திருமதி சந்திரிக்கா பண்டார நாயக்கா குமாரதுங்காவின் கல்வித் தகைமை என்ன? இக்கேள்வியால் எழுந்த சர்ச்சை பற்றி கொழும்பு நாளிகழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

''ஜனாதிபதியின் கல்வித் தகைமை பற்றி ஆங்கிலப் பத்திரிகை ஒன்று அவரிடம் விபரம் கேட்டுக் கடிதம் எழுதியிருக்கிறது. உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்ட 'பயோடேட்டா'வுக்கும் (சுய விபரம்) தங்களிடமுள்ள தகவல்களுக்கும் வேறுபாடு காணப்படுகிறது எனக்கூறி அந்தப்பத்திரிகை கடிதம் போட்டிருந்ததாம். அக்கடிதத்துக்கான பதிலை ஜனாதிபதி அனுப்பவில்லை. அவரது அலுவலகத்திலே உள்ள ஒருவர் பதில் போட்டிருக்கிறார்.

ஜனாதிபதிக்கு முகவரியிட்டு நீங்கள் எழுதிய மார்ச் 14 ஆம் திகதி கடிதம் கிடைத்தது. புழுக்களிடமிருந்து அல்ல. மானுட ஜன்மங்களிடமிருந்து மாத்திரம் வந்து சேரும் கடிதங்களையே இந்த அலுவலகம் மாண்புமிகு ஜனாதிபதிக்கு சமர்ப்பித்து வைக்கும். எனவே உங்களது கடிதத்தைக் குப்பைக் குவியலுடன் சேர்த்து விட்டிருக்கிறோம். என்று பதில் இருந்தது.

பாரிஸ் கோபேன் பல்கலைக் கழகத்தில் ஜனாதிபதி படித்தவர். அரசியல் விஞ்ஞானத்தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்தவர். அபிவிருத்திப் பொருளாதாரத்துறையில் பி. எச். டி. பட்டம்பெற்றவர் ''என்று மேற்படி தகவலை வெளியிட்டுள்ள குறிப்பில் கொழும்புப் பத்திரிகை 'இலங்கையின் முதற் பிரதமர் டி. எஸ். சேன நாயக்கா படித்தது எட்டாம் வகுப்புத்தான். அனைவரும் மெச்சுமளவுக்கு நாட்டை சிறப்பாக அவர் பரிபாலனம் செய்ய வில்லையா? என்றும் அப்பத்திரிகை சிலாகித்துள்ளது. (சி)

சிறுவர் நிதியம் பராமரிக்கும்

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தின் கொடூரத்திற்கு தனது தாயையும் தந்தையும் பறிகொடுத்து ஆறுநாளில் அநாதையாகிவிட்ட சிசுவின் பராமரிப்பை சிறுவர் பாதுகாப்பு நிதியம் (யூ. கே) பொறுப்பேற்றுள்ளது.

தற்போது இச்சிசு யாழ். போதனாவைத்தியசாலையின் குழந்தைகள் பராமரிப்பு பிரிவில் வைத்துப் பாதுகாக்கப்பட்டுவருகின்றது. (ந)

பல்லவர் காலச் சிறப்புகளில் கி. பி. 8 ஆம் நூற்றாண்டு துர்க்கையும் ஆய்வில் கண்டுபிடிப்பு

[சென்னை]

1200 ஆண்டுகளுக்கு முற்பட்ட பல்லவர் காலச் சிற்பங்கள் திருவள்ளுவர் மாவட்டம் பெருமாள் பட்டு என்ற கிராமத்திலிருந்து தமிழக அரசு தொல்லியல் துறையினரால் கண்டறியப்பட்டுள்ளது.

துர்க்கையம்மன் கோயில், செல்லியம்மன் கோயில், கங்கையம்மன் கோயில் மற்றும் நெடுங்குளம் மேட்டுப் பகுதிகளில் இச்சிற்பங்கள் இருப்பது அறியப்பட்டது. துர்க்கையம்மன் கோயிலில் உள்ள துர்க்கை கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

பல்லவரின் ஆளுகைக்கு திருத்தணி, காஞ்சிபுரம், மாமல்லபுரம் போன்ற இடங்கள் உட்பட்டிருந்தன. அங்கெல்லாம் அவர் கட்டிய கோயில்களைப் போல இங்கும் ஒரு கட்டடக் கோயில் இருந்திருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். (சி)

குடிநீர் பெறுவதில் மூண்ட 'போர்'

குரங்குகள் கொட்டமடக்க வாள்சகிதம் வந்த மலைஜாதியினர்

(நைரோபி)

குடிக்கும் நீருக்காக குரங்குகளுடன் மனிதர்கள் கடும் சண்டையிட்ட சம்பவம் ஒன்று அண்மையில் இடம் பெற்றுள்ளது.

வடக்குநைரோபியில்உள்ள வர்த்தக மையமொன்றில் இடம்பெற்ற இம் மனிதர்க்கும் குரங்குகளுக்குமிடையேயான மோதலில் 10 குரங்குகள் இறந்தன மனிதர்பலர் காயமுற்றனர்.

இச்சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது, மேற்படி பகுதியில் கடந்த 6 மாதங்களாகவே கடும் பஞ்சம் நிலவிவருவதனால் அங்கு வாழும் மலைஜாதியினர் மிகுந்த இன்னல்பட்டு வருகின்றனர். இந்நிலையில், அருகில் உள்ள கிராமம் ஒன்றில் இருந்து 3 தாங்கிகளில் இப் பகுதிக்கு நீர் கொண்டுவரப் பட்டது.

இதனைப் பெற்றுக்கொள்வதற்காக, மக்கள் சூழ்ந்து நின்ற வேளையில் கூட்டமாக வந்த குரங்குகள் மக்களைத் தாக்கத் தொடங்கின.

குரங்குகளுடன் ஏற்பட்ட மோதலையடுத்து, மலைஜாதியினரை விரட்டியடித்த குரங்குகள் தமது தாகத்தைத் தீர்த்துக் கொண்டன.

குரங்குகளின் செயலால் கோபமுற்ற மலைஜாதியினர், சிறிது நேரங்கழித்து குரங்குகளைப் பழிதீர்ப்பதற்காக அரிவாள் மற்றும் ஆயுதங்களுடன் பெருமளவில் அவ்விடம் வந்தனர்.

அங்கு இடம்பெற்ற சண்டையில் மனிதர்க்கு இணையாக குரங்குகளும் சண்டையிட்டன. இதில் 10 குரங்குகள் இறந்தன. பல மனிதர்கள் காயமுற்றனர். (சி-உ)

பெற்றோலியபொருள்விலைகுறைப்பு

அமெ. அதிபரின் ஆலோசனை; ஒபெக் ஏற்பு; ஈரான் மட்டும் மறுப்பு

(வாஷிங்டன்)

உலக நாடுகள் பெற்றோலியப் பொருள்களின் விலைகளைக் குறைக்க உதவும் வகையில், ஒபெக் அமைப்பில் அங்கத்துவம் பெறும் நாடுகள் பெற்றோலியப் பொருள்களின் நாளாந்த உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். எனும் அமெரிக்க அதிபரின் கோரிக்கைக்கு ஒபெக் அமைப்பு இணக்கம் தெரிவித்துள்ளது.

எனினும் இந்த இணக்கப் பாட்டிற்கு ஈரான் ஒத்துழைப்பு வழங்க மறுத்துள்ளது.

எனவே ஈரான் தவிர்ந்த ஏனைய ஒபெக் அங்கத்துவ நாடுகள் தமது பெற்றோலிய உற்பத்திகளை நாளொன்றுக்கு 17 இலட்சம் பீப்பாய் என்ற அளவில் அதிகரிக்க வுள்ளன.

இதனைத் தொடர்ந்து பெற்றோலியப் பொருட்களின் விலை உலகச் சந்தையில் குறைவடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(சி-உ)

கடல் மண்ணில் நிக்கல் உலோகம் இந்திய விஞ்ஞானிகள் அபாரசாதனை

[புதுடில்லி]

கடல் மண்ணிலிருந்து நிக்கல் மற்றும் கோபல் மற்றும் உலோகங்களை எடுக்கும் நுட்பத்தை இந்திய விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர் என்று அமைச்சர் மனோகர் ஜோசி பாராளுமன்றில் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில் இவ்வளவு காலமும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்த நிக்கல், கோபல் போன்ற உலோகங்கள் வருங்காலங்களில் இறக்குமதி செய்யும் சந்தர்ப்பம் குறையும் என்றும் பல கோடி ரூபா நாட்டுக்குக் கிடைக்கும் என்றார்.

விஞ்ஞானிகள் கண்டறிந்த இந்த தொழில் நுட்பத்தினால் பல கோடி ரூபா வருவாய் கிடைக்கும் என்றும் குறிப்பிட்டார்.

ஐ.நா. சபையால் இந்தியாவிற்கென்று ஒதுக்கப்பட்ட கடல் பகுதியான மத்திய இந்து மகா கடலில் இப்படிவ மணல்கள் தோண்டி எடுக்கப்படலாமென்றும் பாராளுமன்ற உரையில் குறிப்பிட்டார்.

கடல் மண்ணிலிருந்து தொழில் நுட்பம் மூலம் இந்தியா தான் முதலில் இறங்கியுள்ளதென்றும் தங்கள் கடல் பகுதியில் 3 கோடியே 80 இலட்சம் தொன் மணல் இருப்பதாகவும் அமைச்சர் மனோகர் ஜோசி பாராளுமன்றத்தில் குறிப்பிட்டுள்ளார். (து)

உகண்டாவின் கோர நிகழ்வு; குரூர கொலைகளா என எழும் சந்தேகம்!

(கப்பாலா)

உகண்டாவில் கனுன்கு என்னும் கிராமத்தின் தேவாலயத்தில் இடம் பெற்ற பெரும் எண்ணிக்கையானோர் மரண நிகழ்வின் பின்னணியினை உகண்டாபொலிஸார் ஆராய்ந்து வருகின்றனர்.

''ஆண்டவரின் பத்துக் கட்டளைகளை மீண்டும் அமுல்ப்படுத்துவதற்கான இயக்கம்'' என்ற கிறிஸ்தவ அமைப்பின் தலைவர்களே இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம் என உகண்டாப் பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.



தேவாலயத்தில் எரிந்து சிதிலமடைந்த நிலையில் 400 இற்கும் மேற்பட்டோரின் சடலங்கள் மீட்கப் பட்டபோதும் வேறுபல புதைகுழிகளினின்றும் மீட்கப்பட்ட நூற்றுக்கணக்கான சடலங்கள் புதிய சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளன.

ஏனெனில் புதைகுழிகளில் மீட்கப்பட்ட சடலங்கள் வெட்டியும் கத்தியால் குத்தியும் நஞ்சூட்டியும் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

இது போன்று இன்னும் இரண்டு அல்லது மூன்று புதைகுழிகள் இருக்கலாம் என உகண்டாப் பொலிஸார் சந்தேகிப்பதுடன் தற்போது இது தொடர்பான தேடுதல்களையும் நடாத்தி வருகின்றனர்.

உலகம் அழிந்து விடப் போகிறது. ஆதலால் உங்களது சொத்துக்களை விற்று விட்டு சொர்க்கத்துக்குச் செல்வோம் வாருங்கள் என பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

உலகம் அழிந்துவிடும் என்ற தமது ஆருடம் பொய்த்து விட்டதாலும் இதனால் பொதுமக்களது சொத்துக்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். என்னும் நிலைமையை சமாளிப்பதற்காகவுமே மேற்படி தனிமதப் பிரிவினர்.

இவ்வாறான கொடூரச் செயலில் இறங்கியிருக்கலாம் மென தற்போது கருதப்படுகிறது. (சி-உ)

ஹொங்கொங்கில் மக்கள் நடமாட எச்சரிக்கை

(ஹொங்கொங்)

ஹொங் ஹொங்கில் சுவாசக் கோளாறு உள்ளவர்களும் இதய நோய் உள்ளவர்களும் தங்களுடைய நடமாட்டத்தை நிறுத்த வேண்டும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளார்கள்.

போக்குவரத்து நெரிசலான பகுதிகளிலும் கடை வீதிகளிலும் நடமாட வேண்டாமென்றும் தூசிப்படலங்கள் அபாயகரமாகப் பரவியுள்ளதென்றும் சுகாதார அதிகாரிகளின் அறிக்கைகள் கூறுகின்றன.

ஹொங்கொங் நகர் தூசுப் படலங்களால் மூடப்பட்டிருக்கின்றன என்றும் குறிப்பிட்ட் எல்லைகளுக்கப்பால் கண்களுக்கு எதுவும் தெரியவில்லை யென்றும் குறிப்பாக நோயாளிகளை நெரிசல் நிறைந்த பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென்றும அறிவுறுத்தலில் கூறப்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது. (து)

தூசிப்படலம் எச்சரிக்கை

தாய்வான் சட்டசபை கலைப்பு

பாராளுமன்றம் பொறுப்புகளை ஏற்பு

(தாய்வான்)

தாய்வானில் வேகமாக ஏற்பட்டு வரும் அரசியல் மாற்றங்களைத் தொடர்ந்து அதன் தேசிய சட்டசபை கலைக்கப்பட்டது.

334 உறுப்பினர்களைக் கொண்ட இச் சட்டசபையை சுதந்திர ஆதரவு ஜனநாயகக் கட்சியும் கம்யூனிஸ்சக் காட்சியும் கலைப்பதற்கு சம்மதம் தெரிவித்தனர் என்று சொல்லப்படுகிறது.

அரசியல் அமைப்புச் சட்டத்தைக் கவனித்து வந்த இந்த சட்டசபையின் பொறுப்புகளை தாய்வானின்பாராளுமன்றம் இனிக் கவனிக்கும் என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கலைப்பின் நோக்கம் அரசியல் முறைகளை ஒழுங்குபடுத்துவதும் மனித வளத்தை நிச்சயப் படுத்தவும் தொடர் தேர்தல்கள் நடத்தி வளங்கள் வீணடிக்கப்படுவதைத் தடுப்பதுமாகும் என்று செய்திகள் கூறுகின்றன. (து)

செய்திக் குவியல்

★ இஸ்ரேல் முன்னாள் தலைவர் பெஞ்சமினுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப் பட்டுள்ளது.

★ சவூதி அரேபியாவில் மிக மோசமான மனித உரிமை மீறல்கள் நடந்துள்ளதாக மனித உரிமைகள் அமைப்பு கூறுகிறது.

★ காஷ்மீர் எல்லைப் பகுதியில் சிறுவன் ஒருவன் ஷெல்லொன்றை எடுத்து விளையாடியதில் அது வெடித்து சிறுவன் இறந்தான்.

★ இராணுவ ஆட்சியாளராக தான் இருக்க விரும்பவில்லை யென்று பாகிஸ்தான் அதிபர் முஷாரப் கூறினார்.

★ குவைத்தில் சிப்பிகள் விற்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. (து)

உலகத் தமிழிலக்கிய வரலாறு ஆய்வு நூல் பணி ஆரம்பமானது

உலகத்தமிழ் இலக்கிய வரலாறு வல்லுநர் பணி அவைத் தொடக்கவிழா அண்மையில் சென்னை நகரத்தில் இடம் பெற்றுள்ளது.

இதனையடுத்து, உலகத் தமிழ் இலக்கிய வரலாறு எழுதும் பணி சென்னையில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் தொன்மைக்காலம் முதல் இக்காலம் வரையான தமிழ் இலக்கிய வரலாறு ஆராயப்பட்டு எழுத்துருவாக்கம் பெறவுள்ளது. (சி-உ)

ஆப்கான்-எல்லைப்பகுதியில் வெடி விபத்து; 18 பேர் பலி

பாகிஸ்தானின்பூர்வீகக்குடி மக்கள் வாழும்ஆப்கானிஸ்தான் எல்லைப்பகுதியில் ரெபம் வெடிவிபத்து ஒன்று நிகழ்ந்துள்ளது.

இதில் கொல்லப்பட்டவர்கள் 18பேர் மாத்திரமே என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இவ்வெண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கலாம் எனக்கருதப்படுகிறது.

இச்சம்பவத்தில் காயமுற்றவர்களில் பலர் ஆப்கானிஸ்தானைச்சேர்ந்த சிறுவர்களாவர்.

குண்டுவெடிப்புத் தொடர்பாக பாகிஸ்தான் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சி-உ-5)

சித்திரவதை தாக்கமறிய உதவும் கைநூல் பிரி-அரசு வெளியிட்டது

(லண்டன்)

சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்கள் அதை உரிய முறையில் அறிவதற்கு உதவும் வகையிலான கைநூல் ஒன்றினை பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சு அலுவலகம் வெளியிட்டுள்ளது.

இங்கிலாந்தின் பிரபல பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவர் இக் கைநூலினை எழுதியுள்ளார்.

மனித உரிமை நடவடிக்கை குழுவினர், சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வைத்தியர், சட்டத்தரணிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களது குடும்பங்களுக்கு இக் கைநூல் உதவியாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.

ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் குழுவினரால் ஜெனீவாவில் வெளியிடப்படும் சித்திரவதை சம்பந்தமான இக்கைநூல் சகல நாடுகளுக்கும் விநியோகிக்கப் படவுள்ளது. (சி-உ)

வெளிநாட்டுப்பயணம்; தமிழர்களுக்கு புதிய வடிவில் வரும் கெடுபிடிகள்

(ஈச்சமோட்டை)

யாழ் குடாநாட்டிலிருந்து வெளிநாடு செல்வதன் பொருட்டு முறைப்படியான அனுமதிப் பத்திரம் (கிளியரன்ஸ்) பெற்று கொழும்பு செலவோர் அங்கு அப்பயணத்தைத் தொடர்வதில் புதிய நெருக்கடிகளை எதிர் நோக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கிருந்து கிராமசேவகர், பாதுகாப்புத் தரப்பினர் என்று அவர்கள் மூலம் கிடைக்கும் அனுமதிப் பத்திரத்துடன் கொழும்பு சென்று சம்பந்தப்பட்ட தூதரகங்களுக்கு விஸா எடுக்கச் செல்கையில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய புதிய நடைமுறையே தமிழ் மக்களுக்கு பெரிதும் அசௌகரியத்தை உருவாக்கியுள்ளது.

யாழ்.குடாநாட்டில் பெறப்படும் அனுமதிப்பத்திரத்துக்குப் புறம்பாக, விண்ணப்பதாரிகள் பற்றியும் மற்றுமொரு அனுமதிப் பத்திரத்தை அவர்களது பகுதிகளைச் (குடாநாட்டில்) சேர்ந்த பொலிஸ் நிலையங்களிலிருந்து கொழும்பில் அவர்கள்தங்கியுள்ள பொலிஸ் நிலையத்தார் கோருகின்றனர்.

அதற்கமைய இங்குள்ள பொலிஸ் நிலையங்கள் விண்ணப்பதாரிகளின் விவரங்களை உறுதிப்படுத்தி கொழும்புக்கு அனுப்பி வைத்ததன் பின்னரே வெளிநாட்டுத் தூதரகங்கள் சென்று விஸா பெற வழி பிறக்கும்.

இந்த நடைமுறையால் 6 மாதங்களுக்கே செல்லுபடியாகக் கூடிய மருத்துவச் சான்றிதழைப் பெற்றோர் தாமத நிலையால் திரும்பவும் புதிய சான்றிதழ் பெற வேண்டியுள்ளது. என்றும் இக்காலப் பகுதியில் தாம் தங்கியுள்ள இடங்களில் பலவித சிரமங்களுக்கு உள்ளாக வேண்டியிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

புதிய அனுமதி இங்கிருந்து அங்கு சென்றடைய பல மாதங்கள் கூட ஆகலாம், 1999 ஆம் ஆண்டு அங்கிருந்து கோரப்பட்ட அனுமதிப் பத்திரம் மாதங்கள் பல கடந்தும் இன்னமும் இங்கிருந்து செல்லவில்லை என்பதும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இந்த நடைமுறையில் ஒரு மாற்றீடாக, குறிப்பிட்ட ஒருகால எல்லைக்குள் இங்குள்ள பொலிஸ் நிலையங்களிலிருந்து அங்கு விண்ணப்பதாரிகள் பற்றிய அனுமதிப் பத்திரம் அனுப்பப்படாது விட்டால் அந்த விண்ணப்பதாரிகள் வெளிநாட்டுப் பயணத்துக்குத் தகுதியுடையவர்களே என எடுத்துக் கொள்ளலாம். என சிலாகிக்கப்படுகிறது.

இது விடயத்தில், தமிழ் மக்களின் பிரச்சனைக்குப் பரிகாரம் காணக்கூடிய நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுவோர் தலையிட்டு ஆவன செய்வார்களா, செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்படுகிறது. (சி-59)

தற்போதைய மோதல் நிலையானது சமாதான முயற்சிகளுக்கு உகந்ததல்ல

ஊர்காவற்றுறை பிரதேச தலைவர் கோரிக்கை

பளை மற்றும் வடமராட்சிக்கிழக்குப் பகுதிகளில் இடம் பெற்றுவரும் மோதல்களினால் வீணான உயிரிழப்புக்களும், பொருள் அழிவுகளுமே ஏற்படுகிறது.

இடம் பெயர்ந்து சொல்லொணாத் துன்பங்களைஅனுபவித்து வரும் மக்கள் இயல்பு நிலைக்குத் திரும்பும் இவ்வேளையில் இத்தகைய சம்பவங்களை மனிதாபிமானமுடைய எவரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

மூன்றாந்தர மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப் பட்டுள்ள இவ் வேளையில் இத்தகைய மோதல் சம்பவங்கள் சமாதானத்திற்கு ஆரோக்கியமான தொன்றல்ல. எனவே மோதலில் ஈடுபட்டிருக்கும் இருசாராரும் சண்டையை உடன்நிறுத்தி மக்களின் அச்ச நிலையைப் போக்க வேண்டும்.

இவ்வாறு ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளரும், ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவருமான என். மதனராஜா (மனோ) அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார். (ந)

சிறுமிக்கு நேர்ந்த கொடுமை ரிமாண்டில் பல்கலை மாணவன்

(கொழும்பு)

வறுமையின் கொடுமையால் வீட்டு வேலைக்காரியாக அமர்த்தப்பட்ட 12வயதுச் சிறுமியை மானபங்கம் செய்ததாக பல்கலைக்கழக மாணவனான 20வயது வாலிபர் ஒருவர் மட்டக்களப்பு நீதிமன்ற உத்தரவின் பேரில் ஏப்ரல் 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றித் தெரியவந்துள்ளதாவது.

மட்டக்களப்பு கல்லடி திருச்செந்தூரைச் சேர்ந்த பிரஸ்தாப சிறுமியை அவரது தாயார் இருதயபுரத்திலுள்ள வீடொன்றில் வறுமை காரணமாக வேலைக்குச் சேர்த்து விட்டார்.

சம்பவதின இரவு அந்த வீட்டிலிருந்த பிரஸ்தாப மாணவன் சிறுமியிருந்த அறைக்குள் நுழைந்து பாலியல் வல்லுறவு மூலம் மானபங்கம் செய்தாராம்.

உபாதையால் வேதனையுற்ற சிறுமி அவ்வீட்டிலிருந்த பெண்ணால் மட்டக்களப்பு பொது மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அளித்த வாக்குமூலத்தில் மேற்படி விவரங்களைத் தெரிவித்ததுடன் மாணவனை அவ்வீட்டிலிருந்த மூத்த அண்ணன் என்று குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதவான் முன்னிலையில் சந்தேகநபர் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (சி)

சென்னை கலந்துரையாடலில் யாழ். பல்கலை. பிரதிநிதிகள்

(யாழ்ப்பாணம்)

சென்னையில் நிகழ்வுள்ள உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உலக தமிழ் இலக்கிய வரலாறு பற்றிய கலந்துரையாடலில் கலந்து கொள்வதற்காக யாழ்.பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறையிலிருந்து.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் கலாநிதி சி.சிவலிங்கராஜா பேராசிரியர் ந.சுப்பிரமணியஐயர் கலாநிதிதிருமதி மனோண்மணி சண்முகதாஸ் ஆகியோர் இந்தியாவிற்குச் சென்றுள்ளனர்.

இவர்களில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் கலாநிதி திருமதி மனோண்மணி சண்முகதாஸ் ஆகியோர் இலங்கையில் தமிழ் இலக்கியவரலாறு எழுதுவதற்கான அவசியம் தொடர்பாக கருத்துரை வழங்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி-3)

துர்நெடி, நுளம்புத் தொல்லை பாஷையூர் குறுக்கு வாய்க்கால் சீரமைப்பில் புறக்கணிப்பு?

(ஈச்சமோட்டை)

பாசையூர் முதலாம் குறுக்குத் தெருவில் உள்ள முக்கிய இடைப்பாதையில் உள்ள (சென். அந்தனீஸ் விளையாட்டு மைதானத்திற்குச் செல்வது) நீர் வாய்க்கால் பல வருடங்களாகத் திருத்தி சீரமைக்கப்படாததால் இப் பகுதியில் வாழும் மக்கள் பல வித அசௌகரியங்களை அனுபவிக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட பாதையின் மேற்குப் புறமுள்ள இவ் வாய்க்காலில் ஊடாகச் செல்லும் நீர் சீராக ஓடி ஓரிடத்தைச் சென்றடைய முடியாதவாறு தடுப்பு உள்ளதால் அந் நீர் வாய்க்காலிலேயே தேங்கி துர் நாற்றம் நுளம்புப் பெருக்கம் ஏற்பட வாய்ப்பாகிறது எனச் சுட்டிக் காட்டப்படுகிறது.

மலேரியா நோய் தடுப்புப் பற்றி பெரிதாக இப்போதெல்லாம் பிரசாரம் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. ஆனால் மலேரியா நுளம்புகள் மூலம் பரவுவதற்கு இத்தகைய இழி நிலையே காரணமாகி விடுவதைத் தடுக்க முனைப்புக் காட்டப்பட வில்லையே என்கிறார்கள் இப்பகுதிக் குடியிருப்பாளர்கள்.

இவ் வாய்க்காலைத்திருத்த சுகாதார நலன் பேணுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறையிட்டும் எவ்வித பயனும் கிடைக்க வில்லை என்றும் நீரோட்டம் இல்லாத வாய்கால்கள் கூட திருத்தப்பட்டுள்ள போதிலும் 50 யார் நீளம் கூட இல்லாத குறிப்பிட்ட வாய்க்கால் மாத்திரம் திருத்தப்படாது புறக்கணிக்கப்பட்டு வருகிறது என்றும் கூறப்படுகிறது.

முன்னதாக திருத்தப்பட்ட வாய்க்கால்கள் சுமார் 200 யார் நீளம் கொண்டவை என்றும் குறிப்பிட்ட குறுகிய வாய்க்காலைத் திருத்த மாத்திரம் நிதியில்லை நீர் வடிவதற்கான மட்டம் சரியில்லை என்றெல்லாம் காட்டுப் போக்குகள் கூறப்படுகிறது என்றும் திட்டமிடப்படாத வாய்க்கால் புனரமைப்புச் செயற்பாடே இந்நிலைக்குக் காரணம் என்றும் மேலும் தெரிவிக்கப் படுகிறது.

யாழ். மாநகர சபை இது விடயத்தில் உடன் கவனமெடுத்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

சென். அந்தனீஸ் விளையாட்டு மைதானத்திற்கு வரும்ரசிகர்களும்அசௌகரியமாக அமர்ந்தோ நின்றவாறோ போட்டிகளை ரசிக்க முடியாதவாறு துர் நெடியும், நுளம்புத் தொல்லையும் அவர்களையும் ஆட்டிப்படைக்கின்றன எனவும் சுட்டிக் காட்டப்படுகிறது. (59-சி)

இலவச திருமணப் பதிவு

[தெல்லிப்பழை]

தெல்லிப்பழை பனைதென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால், தெல்லிப்பழைப் பகுதியில் அண்மையில் இலவச திருமணப் பதிவு மேற்கொள்ளப்பட்டது.

இதில் 23 தம்பதிகள் கலந்து கொண்டனர் கடந்த 1991 ஆம் ஆண்டு 101 தம்பதிகளுக்கு இது போன்ற இலவச திருமணப் பதிவினை தெல்லிப்பழை பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. [க-உ]

மகாத்மா காந்தியடிகள் 27-11-27 ஞாயிற்றுக்கிழமை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நிகழ்த்திய சொற்பொழிவு

இந்திய தேசபிதா மகாத்மா காந்தியடிகளின் நினைவுதினத்தை யொட்டி அன்னாரதுஉரை இங்குபிரசுரமாகிறது;

ஆ-ர்

தலைமையாசிரியர் அவர்களே!
மாணவர்களே!

இன்று உங்கள் வித்தியாசாலைக்கு நான் சமூகஞ் செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தமை பற்றி மிக மகிழ்ச்சியடைகின்றேன். மாணவர்களைச் சந்திப்பதென்றால் எப்போதும் எனக்கு அளவுகடந்த சந்தோஷம். கபடமற்ற இளைஞராகும் உங்களுடைய உள்ளங்களில் நல்வர்த்தைகள் நன்கு பதியுந்தன்மையன. உங்கள் தலைமையாசிரியரும், உதவியாசிரியர்களும் இங்கே எண்பக்கத்தில் நிற்கின்றார்கள். அவர்களுடன் உங்கள் வித்தியாசாலையின் தாபகரும் கூட நிற்கின்றார். இக் கல்விக் கழகம் உண்மையான கல்வியை உங்கட்கு அளிக்குமாயின் அதுவே பெரிய பேறாகும்,

கல்வி கற்பதோடு நில்லாது கற்றபடி ஒழுகவும் பழகிக்கொள்ள வேண்டும். மாணவரென்போர், தந்தை தாயார், ஆசிரியர்என்போர்க்குக் கீழ்ப்படிந்து அவர்கள் நல்வார்த்தைகளைத் தேவவாக்காகக் கொண்டு நடக்கவேண்டும். இளம்பருவத்தில் நாம் கற்றுப்பழகுவன ஒருபோதும் நம்மைவிட்டு நீங்கா. தாய்தந்தையர் ஆசிரியர் நமக்களிக்கும் புத்திமதிகள் சுட்டளைகள் சிறுவயதினராயிருக்கும்போது சிலபோது கசப்பாயிருக்கும். அவைகளை ஏற்காமலும் விடலாம். ஆனால் வாழ்க்கையில் மிக்க அனுபவம் படைத்த அவர்களுடைய வாக்குகள், உபதேசங்கள் எவ்வளவு உண்மையானவை என்பது வயது முதிர்ந்தபின் தான் தெரியவரும். எல்லாவற்றிற்கும் முதலாவதாக நீங்கள் கடவுள் பக்தியுடையவர்களாக வாழ முயலவேண்டும். அப்போது தான் உங்களுக்கு நல்லொழுக்கம் பெரிய ஆபரணமாகக் கிடைக்கும். சத்தியத்தை ஓம்பிக்கடைப்பிடிக்க வல்லவராக வேண்டும். சத்தித்தை மேற்கொள்பவர்களை எவ்வித தீங்குகளும் தீமைகளும் வந்தணுக மாட்டா;

கல்வி கற்பதோடு நில்லாது சமுதாயத்தின் முன்னேற்றத்தை நாடித் தொண்டுகள் செய்யவும் இளம் பருவத்திலேயே பழகிக் கொள்ள வேண்டும்.

இப்போது நான் இலங்கைக்கு வந்தது கதர் இயக்கத்துக்குப் பணம் சேர்ப்பதற்காகவே. இந்தியாவில் கோடிக்கணக்கான ஏழை மக்கள் நேரத்துக்கு உண்ணப் போதிய உணவின்றியும் உடுக்கத்துணியின்றியும் வருந்துகின்றார்கள் என்பதை நான் உங்கட்குச் சொல்லவேண்டியதில்லை. அவர்களுடைய வறுமையை ஒழிப்பதற்கே இந்தக் கதர் இயக்கத்தை நாம் ஆரம்பித்துள்ளோம். பஞ்சிலிருந்து நூல் நூற்றுக் கதர்ப் புடவைகள் நெசவு செய்வதால் அவ்வேளை மக்களின் பொருளாதாரம் உயர்வடையுமென்பது எனது பூரணமான நம்பிக்கை. நீங்கள் இன்று அளிக்குங் காணிக்கை இப் புனிதமான தொண்டுக்கே செலவு செய்யப்படும். எல்லாமக்களும் கையினால்நெசவு செய்யப்பட்ட கதராடைகளையே அணிவ தென்று உறுதிசெய்து கொள்வராயின், இப் பொருளாதார இயக்கம் நாட்டிற்கும் மக்கட்கும் பெரும் நன்மையை வருவிக்குமென்பதில் ஐயமில்லை. மாணவர்களாகிய நீங்கள் இந்தப் பெரிய தொண்டுக்குப் பணவுதவி செய்ததுடன் திருப்தியடையாது கதர்ப் புடைவைகளையே உபயோகிக்க உடன்பட வேண்டும். அப்போதுதான் கதர் இயக்கம் வளர்ச்சியடைந்து ஏழை மக்களின் வாழ்வு சிறக்கும். நீங்கள் மாத்திரமல்ல உங்கள் வீடுகளில் வசிக்கும் பெண்மணிகளும் கருணையுடன் கதராடைகளை உபயோகிக்க முன்வரவேண்டும்.

மேலும் நான் கூறுவது என்னவென்றால் நல்லொழுக்கமும், கடவுள்பக்தியும், கீழ்ப்படிவுமே உங்களை மேல்நிலைக்குக்கொண்டு வரவல்லன. உயரிய நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இவ் வித்தியாசாலை வளர்ச்சியடைந்து, நாளடைவில் நாட்டுக்குப் பெரு நன்மையைப் பயக்க வேண்டுமென்று நான் கடவுளைப் பிரார்த்திக்கின்றேன். நீங்கள் மனமுவந்து இந்தியாவிலுள்ள ஏழை மக்களின் பொருட்டு அன்புடன் அளித்த காணிக்கைக்கு மறுபடியும் எனது தாழ்மையான நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

தமிழாக்கம்:
சுன்னாகம், **கு.அம்பலவாணபிள்ளை**

(நன்றி-சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரிச் சஞ்சிகை)

செய்தித் துளிகள்

மெய்வல்லுநர் போட்டி

(இணுவில்)

சுன்னாகம் கோட்டைக்காடு அ.த.க பாடசாலையின் மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழன் பிற்பகல் 2.00 மணிக்கு நவரத்தினம் தலைமையில் இடம் பெறும்.

உதவிக்கல்வி ப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன் பிரதம அதிதியாக கலந்து கொள்வார்,

வலிகாமம் வலய உடற் கல்வி உதவிக் கல்விப்பாணிப் பாளர் வி.பாலசிங்கம் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வார். (க-49)

★ ★ ★

(அச்சுவேலி)

அச்சுவேலி கஜமுகன் பாலர் பாடசாலையில் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு செல்வி பொ. மகேஸ்வரி தலைமையில் இடம்பெறவுள்ளது.

செல்வி பொ. மகேஸ்வரி தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் வலி. கிழக்கு பிரதேசசபை தலைவர் பூ. குணசிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (க-57)

மெய்வல்லுநர் போட்டியின் முடிவுகள்

(திருநல்வேலி)

நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கழகங்களிடையே நடை பெற்ற மெய் வல்லுர் போட்டிகளின் முடிவுகள்.

கொக்குவில் மே.சீ.சீ விளையாட்டுக் கழகம் முதலாவது இடத்தையும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தையும் திருநெல்வேலி கலாமன்ற விளையாட்டுக் கழகம் மூன்றாம் இடத்தையும் பெற்றது.

என்னினும் இப்பிரதேசத்தில்அதிக கழகங்கள்காணப்பட்ட போதும் குறைவான கழகங்களே இப் போட்டியில் பங்குபற்றியதாக போட்டி அமைப்பாளர் கலலை தெரிவித்தார். (க-22)

ஊழியர்கள் தற்காலிக இடமாற்றம்

(நிராவியடி)

பளை மருதன்கேணிப் பிரதேசங்களிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் ஊழியர்களில் மீள வேலைக்குத்திரும்பமுடியாத ஊழியர்களுக்கு தற்காலிகமான இடமாற்றம் சுகாதார சேவைகள் மகாணப்பிரதிப் பணிப்பாளரினால் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கள் முதல் பளை மற்றும் வடமராட்சி கிழக்குப் பிரதேசங்களில் உக்கிரமடைந்த சண்டைகளால் அப்பிதேசங்களுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில் இவ் ஊழியர்கள் கடமைக்கு மீள சமுகமளிக்க முடியாதிருப்பதாக நேற்று புதன்கிழமை முறையிட்டதை தொடர்ந்து 29ஆம் திகதியிலிருந்து ஊழியர்களின் சுயவிருப்பின்பேரில் கேட்டுக்கொண்ட அம்பன் கொடிகாமம் பருத்தித்துறை சாவகச்சேரி ஆகிய வைத்திய சாலைக்கு தற்காலிக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (க-78)

சில்லாலையூர் ஞானவைரவர் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சில்லாலை ஸ்ரீ ஞானவைரவப் பெருமான் ஆவயவருடாந்த அஷ்டோத்தர சங்காபிஷேகம் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை நிகழவுள்ளன.

அன்றைய தினமும் முதல் நாளும் கிரியைகள் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (சி)

திரைப்படக் காட்சித்தொடர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கும், கலாநிதி லெஸ்ரர் ஜேம்பீரிசின் கலைத்துவ திரைப்படக் காட்சித்தொடர் எதிர்வரும் சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மொழியியற்றுறை விரிவுரையாளர் திரு. விமல்சுவாமிநாதன் அவர்களின் விளக்க வுரையைத் தொடர்ந்து கலாநிதி லெஸ்ரர் ஜேம்பீரிசின் ''கம்பரெலியா'' [GAMPARALIYA) எனும் திரைப்படம் வீடியோக் காட்சியாக இடம் பெறும்.

ஆர்வலர்கள் எவரும் இந்நிகழ்வில் வருகைதந்து பயன்பெற முடியுமென்று, புறநிலைப் படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தெரிவிக்கின்றார். (க)

கலைஇலக்கிய தொடக்கவிழா

[யாழ்ப்பாணம்]

தொண்டமானாறு- கெருடாவில், ''கலை இலக்கிய சாகரம்'' தொடக்கவிழா, எதிர் வரும் 2 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் தொண்டமானாறு வீ. மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

கலை இலக்கிய சாகரம் செயற்குழு தலைவர் கி. நவநீதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், எழுத்தாளர் தெணியான் ஆசியுரை வழங்குவார்.

கலை இலக்கிய சாகரம் செயற்குழுச் செயலாளர் சு. குணேஸ்வரன் திட்ட விளக்கவுரை நிகழ்த்துவார். (உ)

மார்சன் கூடலில் வேள்வி

(இளவாலை)

இளவாலை மார்சன் கூடல் அம்பாள் ஆலயத்தில் கடந்த புதன்கிழமை கடாய்கள் பலியிடப்பட்டன. இவ்வேள்வியில் தலா சுமார் 10 ஆயிரம் முதல் 30 ஆயிரம் ரூபா வரை விலை மதிக்கத்தக்க 50 க்கும் மேற்பட்ட ஆடுகள் பலியிடப்பட்டன. (சி-12)

உரும்பிராய் இந்து சம்பியனானது

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கோட்டமட்டத்தில் நடைபெற்ற மென்பந்து கிரிக்கெற் சுற்றுப்போட்டியில் உரும்பிராய் இந்துக்கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (ந)

இத்தா. அண்மிக்கையில் எம் காரை இருபுறம்வந்தவேட்டுகள்துளைத்தன

கால்நடையாக யாழ்.வந்த பெண் திகிலுடன் விபரிப்பு

(யாழ்ப்பாணம்)

திருமணம் ஒன்றில் கலந்து கொள்ள பளையில் இருந்து யாழ். நோக்கி நாம் காரில் வந்துகொண்டிருந்த போது எமது கார் நோக்கி வந்த சரமாரியான துப்பாக்கிக் குண்டுகள் எம்மை தாக்கின''

இவ்வாறு அண்மையில் பளைப்பகுதியில் இடம்பெற்ற மோதலில் இடையில் சிக்கி காயப்பட்டு நேற்று புதன்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில்சிகிச்சைக்காக வந்திருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கணேசன் பரமேஸ்வரி என்பவர்கவலையுடனும்அச்சம் நீங்காதவராகவும் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் ''மணமகனின் வீடு பளையில் உள்ளது நிலைமை சீரில்லாதிருந்ததனால் யாழ்ப்பாணத்திலிருக்கும் மணமகள் வீட்டிலேயே முகூர்த்த வேளையில் சடங்குகளை முடிப்பதற்காக அங்கிருந்து காரில் நானும் சாரதி உட்பட நான்கு பேர் புறப்பட்டு வந்தோம் சில சோதனைச் சாவடிகளைக் கடந்து வந்த போது'எம்மை யாழ். செல்ல வேண்டாம்' எனஇராணுவத்தினர் பணித்தனர். திருப்பி பளையை நோக்கிச் சென்ற போது இத்தாவில் பகுதியை எமது வாகனம் சமீபித்த வேளையில் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. காரில் இருந்த 6 வயது குழந்தை உட்பட மணமகனும் சாரதியும் நானும் காயங்களுக்கு உள்ளானோம். மணமகன் காருக்கு வெளியே வந்து கை உயர்த்தி நின்றவேளை சீருடை அணிந்திருந்த அவர்கள் தாக்குதல்களை நிறுத்திவிட்டார்கள் அதன் பின் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டோம்.

அங்குபோதியவைத்தியவசதிகள்இல்லாத காரணத்தினால் எமக்கு சிறந்த முறையில் சிகிச்சை அளிக்க முடியாத நிலை இருந்தது அத்துடன் அங்கு அன்புலன்ஸ் வண்டி வசதிகளும் இல்லாததனால் பிற இடங்களுக்கும் செல்ல முடியாமல் போயிற்று என்றார்.

பின்னர் வேறு வழிகளால் கால் நடையாகயாழ்.திரும்பி நேற்று (2000.03.29) புதன்கிழமை சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு வந்ததாக அவர் வேதனையுடன் மேலும் தெரிவித்தார். (12-சி)

மகளிர் ஆளுமை விருத்திக்கு யாழ். பல்கலை மகளிர் நிறுவனம் பயன்மிகு திட்டங்கள் முன்வைப்பு

[தென்மராட்சி]

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மகளிர் நிறுவனம் பல்கலைக்கழக மகளிரின் மத்தியில் ஆளுமை விருத்தியையும் வலுவூட்டல் திறனையும் மேம்படுத்தும் பொருட்டு போட்டிகளையும் பயிற்சிகளையும் நடாத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்நிறுவனம் கருத்தரங்குகள் வேலைப்பட்டறைகள் மற்றும் வெளியீடுகள் மூலமும் சமுதாய மாற்ற சிந்தனைகளையும் ஏற்படுத்துவடன் மகளிர்க்கான மூலவள அபிவிருத்தி நிலையத்தையும் ஏற்படுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் 10 அம்சவேலைத்திட்டமொன்று இம்மாதம் 5 ஆம் திகதி நடைபெற்ற நிறுவனத்தின் நிர்வாகக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் மகளிர் சிறுவர்களுக்கான கலைக்களஞ்சியம் ஒன்றையும் மாதாந்த சஞ்சிகை ஒன்றினை வெளியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-77)

காயமடைந்த இரண்டு பேர் வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்,நகரப்பகுதியில்இடம் பெற்ற சண்டைச் சம்பவம் ஒன்றில் நகரப்பகுதியில் தேங்காய் வியாபாரம் செய்துவரும் 5 சந்தி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடும்பப்பெண் ஒருவர் கடும் காயத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவமானது டெக் ஒன்று களவாடப்பட்டதற்கு குறிக்கப்பட்ட நபர் மீது சந்தேகம் கொண்டு பலகைத் துண்டினால் முகத்தில் அடித்ததில் நெற்றியும் மூக்கும் பிளந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதே வேளை கிளாலிப் பகுதியில் இடம் பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் தாயும் மகளும் காயங்களுக்குள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை அவர்கள் குத்தகைக்குப் பெற்ற 3 ஏக்கர் பரப்பளவுகொண்ட தென்னங்காணி சம்பந்தமாக ஏற்பட்ட தகராறு காரணமாகவே இக்காயங்கள் ஏற்பட்டதாக காயப்பட்டோர் தெரிவித்தனர். (ச-12)

கிழக்குப் பல்கலைக்கழக துணை வேந்தர்-பிரதி அமைச்சர் சந்திப்பு-முக்கிய விடயங்கள் ஆராய்வு

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் புதிய துணைவேந்தராக பதவியேற்றுள்ள பேராசிரியர் எம். எஸ். மூக்கையா பல்கலைக் கழக பேரவை உறுப்பினர் சகிதம், தபால் தகவல் தொலைத் தொடர்புகள் பிரதியமைச்சர் எம். எல். ஹிஸ்புல்லாவுடன் மட்டக்களப்பு அலுவலகத்தில் சந்திப்பொன்றை நடாத்தினார்.

துணைவேந்தர் பிரதியமைச்சருடன் ஒரு மணிநேரம் பல்கலைக்கழகத்தின் பல்வேறு தேவைகள் பற்றி உரையாடினார்.

கிழக்கு பல்கலைக் கழகத்தில் 500 இலட்சம் ரூபா செலவில் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாவின் நடவடிக்கையால அமைக்கப்படவுள்ள மருத்துவப்பீடம் தொடர்பாகவும் நீண்ட நேரம் பேசினார்.

பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் வைத்திய கலாநிதி எம். சேவியர் மட்டக்களப்பு மாவட்ட பதில் நீதவான் எம். ஐ. நூர்தீன் ஆகியோர் சந்திப்பில் கலந்து கொண்டனர். (க-60)

எந்தக் கட்சியுமே இனப்பிரச்சினை தீர்வில்தூயபங்களிப்பு செய்யவில்லை

மக்கள் நம்பிக்கை இழப்பு என்கிறார் ஆரியரத்ன

(கொழும்பு)

''இனநெருக்கடிக்குத் தீர்வு காண்பதிலோ போரை முடிவுக்குக் கொண்டுவருவதிலோ இந்நாட்டிலுள்ள எந்த ஒரு அரசியல் கட்சியும் நேர்மையான பங்களிப்பைச் செய்யவில்லை. மக்கள் அரசியல் கட்சிகள் மீது நம்பிக்கை இழந்துள்ளனர்.''

இவ்வாறு சர்வோதயஇயக்கத் தலைவர் ஏ. ரி. ஆரியரத்ன குற்றஞ்சாட்டினார்.

கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் இடம் பெற்ற சமாதானப் பிரார்த்தனை நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில் அமைதியையும் சமாதானத்தையும் மீண்டும் நிலைபெறச் செய்வதற்கும் ஆயுதபாணிகளை அகிம்சை வழியில் கொண்டு வருவதற்குச் சகல மக்களும் ஓரணியில் திரண்டு பிரார்த்தனைகளில் ஈடுபட வேண்டும்'' என பகிரங்கக் கோரிக்கை விடுத்தார்.

அரசியல் சக்திகள் இனப்பிரச்சினையைத் தமது அரசியல் நோக்கங்களுக்காக மாத்திரமே பயன்படுத்த முனைகின்றன.

தமிழ் மக்கள் தாமாகவே ஒன்றுபட்டு அமைதிப் போராட்டத்தை முன்னெடுப்பதற்காக அணிதிரண்டுள்ளனர் என்றும் அவர் தனது பேச்சின் போது குறிப்பிட்டார். (சி)

படகு சேதம்

மட்டக்களப்பு வாவியில் ரோந்து சென்ற கடற்படை படகு புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான போதும் படகில் ஏற்பட்ட சிறு சேதத்துடன் தப்பியது. (வ)

உடைய ரெனப்படுவது
ஊக்கம் அஃதில்லார்
உடையது உடையரோ மற்று
- குறள்

வலம்புரி

கைமேல் பலன்

எங்கள் கலாச்சாரம் தனித்துவமானது. எங்கள் சமய பின்னணியும் அவ்வாறே. திரிபு நாடகங்களில் சிக்கித் தவிக்க எங்கள் சிறார்கள் என்ன மட்பிண்டங்களா? பேரினவாதிகளுக்கு முதுகு சொறிந்த முத்துக்கள் இடித்துரைக்கத் தெரியாத இழிச்சவாயர்களே. வரலாற்றைத் திரிக்கவும் எங்கள்பிள்ளைகள் உணர முடியாத பெயர்கள் பொதிந்த பாடநூல் ஆக்கங்கள் உள்ளங்களுக்கு ஏக்கங்களாக மலிந்த கடந்த காலங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது. பல நிர்வாகிகள் அழுங்குப் பிடியில் தம்மை உயர்த்த உழைத்தவர்க்கு இது ஒரு பாடமாக அமைந்து விட்டது.

தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் நாயகம் மகாசிவம் வயதில் இளையவர். செயல் நாட்டலில் முதிர்ந்தவர். வலிகாமத்தின் விளைந்த மனிதர். தந்தை செல்வாவும், செயலாளர் நாயகம் அமிரும் பாராளுமன்றக் கதிரையை அலங்கரிப்பதற்குஏதுவான திருவிடம் - விடாப்பிடியாக நின்று நீதியின் பக்கம் நிலைத்த பெரியவர் பாதம்பட்ட பூமிக்கு நல்ல - வல்ல சிந்தனையோட்டம் வரத்தானே செய்யும். மகாசிவம் அரசியல் வாதியல்ல. ஆனாலும் அனுபவ அரசியல் வாதிகள் வலிந்து பெற வேண்டிய ஒன்றைப் பெறப்போடுபட்ட பேராளன் ஆகிவிட்டமை பாராட்டுக்குரியது

தமிழ் மண்ணிலே வாழும் சிறார்கள் எங்கள் பண்பாட்டை நழுவ விடாது. பாடநூல்களைப் பயிலும் வாய்ப்பு வேண்டும். மண்வாசனையுள்ள பெயர்கள் அந்நூல்களில் வரவேண்டும். ஒற்றுமை நிலை நாட்டுகிறோம் என்று ஒத்தூதி வயிறு வளர்த்த தம்பிகள் இன்று மண் பற்று அற்று ஒதுங்கிய சங்கதி வெளிச்சமே. அவர்களுக்கு அதுதான் தண்டனை. தன்னிலத்தின் தயவுமில்லை. பிறர் நிலத்துப் புகழுமில்லை. முதுமை ஒன்றுதான் அவர்கள் சொத்து. முத்தோடுமுதுமைச் சொத்து நன்றாகத் தூங்கட்டும்- புல்லுருவிகள் தொலையட்டும்- சிறுவர் புளகாங்கிதமடையட்டும்.

வலம்புரி ஆசிரியர்

பொருத்தமற்ற இடத்தில் அமைக்கப்பட்ட

யாழ். இந்துக் கல்லூரியின் ஆடுகளம்

யாழ்ப்பாண இந்துக் கல்லூரி ஈழத்தமிழர்களின் தேசிய சொத்து. புகழ் பூத்த கல்வி மான்களை புத்திஜீவிகளை இம் மண்ணிற்கு ஈந்தளித்ததில் இந்துக் கல்லூரியின் பணி மகத்தானது. அதனை மனித மொழிகளால் செப்பிடல் அரிது. கல்விப் புலத்தில் உயர்ந்த அதிபர்களை ஆசான்களை காலத்திற்குக் காலம் தன்னகத்தே கொண்டு கல்வி உலகில் அளப்பெரும் சேவை யாற்றி வருவதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

யாழ். இந்துவின் அதிபர்கள் வரிசையில் ஒருவரை ஒருவர் தோற்கடித்தவர்கள் இல்லை. எனினும் சமகால அதிபர்கள் வரிசையில் ஓய்வு பெற்ற அதிபர் அ. பஞ்சலிங்கத்தின் பணி போற்றுவதற்குரியது. இந்துவின் கல்விச் செழிப்பின் உயர்விற்கு அவர் மேலும் உரமூட்டியவர். இந்து பண்பாடு வழுவாது பாதுகாத்தவர்.

அதேபோன்று தற்போதைய அதிபர் ஸ்ரீகுமரன் அவர்களும் ஆளுமைமிக்க-ஆற்றல்மிக்க - அதிபர் தரங்களை ஒழுங்காகக் கொண்டுள்ள ஒருவர். அவரின் நிர்வாகத் திறனுக்கு இந்துவின் மாணவச் செல்வங்கள் தந்த கல்விப்பெறு பேறுகள் சான்று பகரும்.

அத்துடன் இற்றைக் கால இளம் மாணவர்களை ஒழுங்கு படுத்துவதென்பது கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன் இருந்த மாணவர்களை ஒழுங்கு படுத்துவதில் இருந்து வேறுபட்டது. இம் மாற்றம் கால அசைவினாலும் தகவல் தொடர்பு சாதனங்களின் அதீத வளர்ச்சியினாலும் கலாச்சார மாற்றத்தினாலும் ஏற்பட்டது. இந் நிலை எங்கும் உள்ளது.

இந் நிலையிலும் கல்லூரியின் அபிவிருத்தியில், அக்கறை கொண்ட - அக்கறைகொண்டதாகக் காட்டிக் கொள்பவர்களின் நெருக்கீட்டிற்கு மத்தியிலும் அதிபர் ஸ்ரீகுமரனின் பணி பாராட்டுதற்குரியது. அவரை வெளியேற்றுவதில் ஒரு சாரார் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்

★ விதுரன் ★

டிருக்கும் வேளையிலும் அவர்களுக்கெல்லாம் ஈடு கொடுத்து கல்லூரியின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்திச் செல்லும் அவருக்கு கல்விச் சமூகம் கரம் தட்டி வாழ்த்தும்.

பொருத்தமற்ற இடத் தெரிவு

கடந்த காலங்களில் கல்லூரியில் எந்த விடயங்களை மேற்கொள்வதாயினும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரின் ஆலோசனைகள் பெறப்பட்டே அவ்விடயம் நடைமுறைப்படுத்தப்படும்.

ஆனால் அண்மையில் யாழ் இந்துக் கல்லூரியில் பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கூடைப்பந்தாட்ட ஆடுகளம் தன்னாதிக்கமுடைய சிலரின் விருப்பிற்கமைய அமைக்கப்பட்டுள்ளது. இந்துக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்திற்கு அருகில் ஆடுகளம் அமைக்கப்பட்ட செயற்பாடானது திட்டமிடாத-எதிர்கால சிந்தனையற்ற - வகுப்பறைக் கற்றல் செயற்பாட்டில் அக்கறையற்ற ஓர் நடவடிக்கை என்பது அறிவியலாளர்களின் கருத்து.

முழு நேரமும் பயன்படுத்த முடியாத ஆடுகளம்

வகுப்பறைகளுக்கு மிக நெருக்கமாக அதிலும் பல்வேறு நிகழ்வுகள் நடைபெறுகின்ற ''குமாரசாமி மண்டபத்திற்கு'' அருகில் ஆடுகளம் அமைக்கப்பட்ட நடவடிக்கையானது அறிவற்ற-இலங்கை ஒரு வளர்முக நாடு என்ற எண்ணக்கருவை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது.

விளையாட்டு மைதானம்-ஆடுகளம் அமைக்கப்பட்டால் அதனது முழுப் பயன்பாட்டையும் முழு நேரமும் பெறக் கூடியதாக இருக்க வேண்டும். குறிப்பிட்ட நேரத்திற்குப் பின்பான பயன்பாடென்பது ''பூரணவளப் பயன்பாடு'' என்ற பொருளியல் கருத்திற்கு மாறானது.

ஆனால் கல்வியால் உயர்வு பெற்ற யாழ் இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்ட ஆடுகளம் பாடசாலை நேரத்திலோ அல்லது குமாரசாமி மண்டபத்தில் கலை நிகழ்வுகள் நடைபெறும் போதோ பயன்படுத்த முடியாத தொன்று.

அத்துடன் குமாரசாமி மண்டபம் உயரிய கட்டட அமைப்புக்களைக் கொண்ட பகுதியாக இருப்பதால் ஆடுகளம் அமைக்கப்பட்ட பகுதியில் நிழல் தரும் மரங்கள் இருப்பதே பொருத்தமாகும். இன்று உலக நாடுகள் எல்லாம் சூழலைப் பாதுகாப்பதையும், மரநடுகையையும் ஊக்கு வித்து வரும் இவ் வேளையில் யாழ். இந்துக் கல்லூரியில் மட்டும் நிழல் தரும் மரங்கள் தறிக்கப்பட்டு வகுப்பறை எங்ஙனமும் 'கானல்' வீசத் தக்க வகையில் ஆடுகளம் அமைக்கப் பட்டுள்ளது.

இடத்தெரிவிற்கு கல்லூரி ஆசிரியர்கள் கடும் எதிர்ப்பு

கூடைப்பந்தாட்ட ஆடுகளம் அமைப்பதற்கு ஏற்பாட்டாளர்கள் குமாரசாமி மண்டபத்திற்கு அருகில் இடம் தெரிவு செய்துள்ளார்கள் என்பது அறிந்த கல்லூரியின் ஆசிரியர் குழாம் ஒட்டு மொத்தமாகத் தமது எதிர்ப்பைத் தெரிவித்தார்கள்.

1999 ம் ஆண்டு நவம்பர் மாத இறுதிப் பகுதியில் அதிபரினால் விசேடமாகக் கூட்டப்பட்ட ஆசிரியர் கூட்டத்தில் ஆடுகளம் அமைக்கத் தெரிவு செய்யப்பட்ட இடம் பொருத்தமற்றது, அவ்விடத்தில் ஆடுகளம் அமைக்கப்பட்டால் வகுப்பறைக் கற்றல் செயற்பாடு பெரிதும் பாதிக்கப்படும் என அதிபர்-ஆசிரியர்கள் கூட்டாகக் கருத்துத் தெரிவித்தனர்.

குருஷேத்திரம்

ஆனால் அவைகள் எல்லாம் விழலுக்கு இறைத்த நீரானது ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாட்டோடு நிற்க வேண்டியதுதான். கல்லூரி நிர்வாகம் - கட்டட அமைப்பு - டொனேசன் - மதிப்பு - மரியாதை எல்லாம் எமக்குத்தான் எனக் கல்லூரியின் மதிலுக்கு வெளியில் நிற்கும் சிலர் கேள்விக்குப் பதிலளிப்பது போல் கூறிய தாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆசிரியர்களும் அக்கினிப் பெருமூச்சில் வந்த சமூகம் போல் ''அடங்கமக்கெனநம்ம

இந்துவின் ஆடுகளத்தைத் திறந்து வைப்பதற்கு ஈழத்தில் ஓர் இந்து இல்லையா? நாளை தொடரும்.

வாசகரின் அன்புக்கோரிக்கை

'தமிழர் பண்பாடுபேணி வலம்புரியே உன் புனிதப்பணி தொடரட்டும்'

யாழ். குடாநாட்டில் இன்னுமொரு பத்திரிகை வரமாட்டாதா? என்று ஏங்கித்தவித்த எமக்கு ''வலம்புரி'' யின் பிரவேசம் மன நிறைவுடன் கூடியது.

வலம்புரி மக்கள் மத்தியில் வலம்வரத் தொடங்கி நூறு நாட்கள் கடந்துவிட்டன. இந்த நூறு நாட்களும் சர்வதேச, உள்ளூர் செய்திகள் அத்தனையும் அதன் எதிர் காலஸ்திரத்தன்மைக்குக் கட்டியம் கூறுவது அமைந்திருந்தன.

''நடுநிலை தவறா நன்னெறி காக்கும உங்கள் நாளிதழ்' என்னும் வாக்கியத்திற்கு ஏற்ப தினமும் வலம்புரி தரும் செய்திகளை அவதானித்துப் படிக்கும்போது அதன் நடுநிலைத் தன்மை சொல்லாமலே விளங்கிக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

நான்கு பக்கங்களை, ஆறு பக்கங்களாக்கி, இப்போது எட்டுப்பக்கங்களாக்கி பல்வேறு அம்சங்களை உள்ளடக்கி வருவதையிட்டு நாம் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம். தொண்டர் ஆசிரியர் பட்டியலும், AL ஆசிரியர் பட்டியல், வாசகர்களின் மனங்களில் நிரந்தர இடத்தைப் பிடித்ததுடன் இன்று வேலையற்று பல்வேறு உத்தியோகங்களுக்கு விண்ணப்பித்து அதற்குரிய பெறுபேறுகளை அறிவதற்காக காத்துநிற்கும் இளம் உள்ளங்களின் கருத்தறிந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு பெயர் பட்டியலை முன்கூட்டியே பிரசுரித்து விண்ணப்பதாரியின் ஆவலைப் பூர்த்திசெய்துவிரும் வலம்புரியே நீ நீடுழி வாழ வேண்டும் ஆனால் ஒன்றைமட்டும் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

வலம்புரியே உனது புனித பணிக்கு மாசுகற்பிக்கும் வகையில் தமிழர் தம்பண்பாடு, கலாச்சார விழுமியங்களுக்கு மாறாக சமூகத்தைச் சீரழிக்கும் வகையில் உனது போனா முனையை பதிக்காது இருக்க வேண்டும். தொடர்ந்து வலம்புரி தனது புனிதமான பணியைப் பத்திரிகா தர்மத்திலிருந்து வழுவாது மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

வடமராட்சி வாசகர்
மணிமாறன்



படைத்தவர்

ரோஜா மலர் இருக்கிறது. அதை உருவாக்கியவர் ஒருவர் இருக்க வேண்டும். ஒவ்வொரு பொருளுக்கும் அதை உருவாக்கியவரோ, படைத்தவரோ இருக்க வேண்டும். இயற்கையின்விதி என்று அதைக் கூறுவது தவறு.

அன்னப்பறவைதண்ணீர் கலந்த பாலில் இருந்து, பாலை மட்டும் பிரித்துப் பருகுகிறது. அதன் அலகைப் பாலிலுள்ள சலுத்தியதும், அலகில் இரசாயனப் பொருள் இருப்பதால், அதன் விளைவாக, அலகின் அருகில் உள்ள பால் பிரித்து விடுகிறது—அதன்பின் இவ்வாறு எளிதாக பாலை மட்டும் அன்னம் பருகுகின்றது இவ்வாறுவிஞ்ஞானிகள் கூறுகிறார்கள். ஆனால், அதன் மூக்கருகில் இரசாயனப்பொருளை ஏற்படுத்தியதுயார்? யாராவது ஒருவரை நாம் அச்செயலுக்கு ஏற்றுக் கொள்ளவேண்டும். அதற்கு ஒருகாரணம் வேண்டுமே. கடவுளின் படைப்பு(சிருஷ்டி)என்பதே இதன் காரணம். அனைத்து கண்டுபிடிப்புகளுக்கும் ஒரு சிருஷ்டி கர்த்தா(படைத்தவர்)உண்டு என்பதை மட்டும்மறவாதீர்கள்.

-பாபா-

ஆயுட் சிறை விதிக்கப்பட்ட ஈழத்தமிழர் விடுதலை, சாட்சி குற்றவாளியானார்!

கனடா நீதிமன்றம் தீர்ப்பு

(ஒட்டாவா)

கனடாவில் கொலைக்குற்றத்திற்காக ஆறரை வருடங்கள் சிறைவாழ்வு அனுபவித்த ஈழத்தமிழர் ஒருவர், குற்றமற்றவர் என நிரூபிக்கப்பட்டதால் அண்மையில் விடுதலையானார்.

குலவீரசிங்கம் கதிரரேசு (37 வயது) என்பவரே இவ்வாறு விடுதலையானவராவர்

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது, 1991ம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையிலிருந்து கனடா போய்ச் சேர்ந்த இவர் 1993 ஆம் ஆண்டு ரொறன்ரோவில் சிவப்பிரகாசம் நவமிசயன் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

நீதிமன்ற விசாரணைகளின் பின்னர் 1993 இல் கொலை செய்த குற்றத்திற்காக இவருக்கு ஆயுள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

குலவீரசிங்கம் தன்மீது சுமத்தப்பட்ட குற்றம் மற்றும் நீதிமன்றினால் வழங்கப்பட்ட தீர்ப்பு தொடர்பாக செய்த மேன்முறையீட்டிற்கிணங்க இவ்வழக்கு மீள விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மேன்முறையீட்டை விசாரித்து நீதிபதி இவரை நிரபராதி எனக் கூறி தீர்ப்பு வழங்கியதுடன், இவருக்கெதிராக சாட்சியமளித்தவரே உண்மையான கொலைக் குற்றவாளி எனவும் தீர்ப்பளித்துள்ளார்.

இதனையடுத்து இவ்வழக்கில் எதிர் சாட்சியமளித்த பத்துப்பேரும் தமது சாட்சியங்களை வாபஸ் பெற்றுக் கொண்டனர்.

இதேசமயம் தீர்ப்பு வழங்கிய நீதிபதி நிரபராதி ஒருவர் தவறான தீர்ப்பு மூலம் வீண் சிறை வாழ்வு அனுபவித்தமை தொடர்பாக நீதி மன்றம் சார்பில் பகிரங்க மன்னிப்புக் கோரியமை குறிப்பிடத்தக்கது. (சி-உ)

மணமகனை அழைக்கப் புறப்பட்டோர் சோகம் கப்பிய நிலையில் திரும்பினராம்

அரியாலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

திருமணத்துக்கான ஏற்பாடுகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டு, முகூர்த்த நேரமும் நிச்சயிக்கப்பட்டு மணமகனை அழைப்பதற்காகச் சென்ற பெண் வீட்டார் மணமகனில்லாது பெரும்ஏமாற்றத்துடன் திரும்பிய சோகச் சம்பவம் ஒன்று அரியாலைப்பகுதியில் ஏற்பட்டது.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது: அரியாலையைச் சேர்ந்த பெண்ணிற்கும், பளையைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டு ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்த நிலையில்மணமகன் அழைப்பிற்காக பெண் வீட்டார் சகல ஏற்பாடுகளுடனும் பளையை நோக்கிப் புறப்பட்டுச் சென்றனர்.

என்னே பரிதாபம்! சாவகச்சேரியிலிருந்துஒரு அங்குலம் கூட எடுத்து வைக்க படையினர் இவர்களை அனுமதிக்கவில்லையாம்.

தற்போதைய நிலையைக் காரணம் காட்டி படையினர் மறுத்துவிட்டனர்.

மேள தாளங்களுடன் மணமகன் வருவார் என எதிர் பார்த்திருந்த பெண் வீட்டார், மணமகனை அழைக்கச் சென்றோர் சோகம் கப்பிய முகத்துடன் வந்ததைக் கண்டு பெரும் அதிர்ச்சியடைந்தனராம்.

இதேவேளை மணமகள் வீட்டார் வருவார்கள் என எதிர்பார்த்திருந்த மணமகன் வீட்டாரும் பெரும் ஏமாற்றம் அடைந்தனராம்.

திருமண நிகழ்வும் ஒத்திப் போடப்பட்டது. (க)

இறந்த...

சபைத் தலைவர் ஸ்ரீரங்கேஸ்வரன் தலைமையில் நடந்த கூட்டத்தில் உபதலைவர் றசீக்கால் கொண்டுவரப்பட்ட இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்க உள்ளூராட்சிகள் அமைச்சர் அலவி மௌலானா ஆகியோருக்கு இது தொடர்பான மகஜரும் அனுப்பப்படுவதுடன் அம்மகஜரின் பிரதியொன்று யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவிற்கும் அனுப்பப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்றத்திற்கு அண்மையில் இடம் பெற்றகுண்டு வெடிப்பில் இறந்த பொதுமக்களுக்கு மரணச்செலவிற்காக 10ஆயிரம் ரூபாவும் நஷ்ட ஈடாக 50ஆயிரம்ரூபாவும் வழங்கப்பட்டமை போல் இச்சம்பவங்களில் காயமடைந்தவர்களுக்கும் கொல்லப்பட்டார்களின் உறவினர்களுக்கும் வழங்கவேண்டும் என்று அம்மகஜரில் தெரிவிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (வ-ச-43-52)

இளைஞன் . . .

லைப் புலிகள் மன்னார் மாவட்ட நிதிப்பொறுப்பாளர் கலைச்செல்வன் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவரது சடலம் மன்னார் ஆதார வைத்தியசாலையில் படையினரால் ஒப்படைக்கப்பட்டது மன்னார் மாவட்ட நீதிவான் கயஸ் பெல்டானோ வைத்தியசாலைக்குச் சென்று சடலத்தை பார்வையிட்டார் எனவும் தெரியவருகிறது (ந)

மருதங்கேணி---

நிலையில் சிக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியசாலையில் விழுந்த ஷெல்லினால் காயமடைந்த கந்தசாமி சோமலிங்கம் (வயது 57) மந்திகை வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

பளைப் பகுதியில் காயமடைந்த 20 க்கும் மேற்பட்டோர் சிக்கியுள்ளதாகவும் அவர்கள் மருத்துவ வசதியின்றிக் கஷ்டப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை வடமராட்சி கிழக்குப்பகுதியில் கிபிர் விமானங்கள் பல தடவைகள் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டபோதும் அது பற்றிய சேத விபரம் தெரியவரவில்லை.

(வ-ச-52-43)

இன்றைய---

யான ஓட்டோ சாரதியின் சடலத்தை மீட்பதற்கு ஐ.சி.ஆர்.சியின் உதவி நாடப்பட்டிருப்பதாகவும், இன்றைய ஹர்த்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. [வ]

தொடரும்--

களில் தஞ்சமடைந்துள்ள இவர்கள் உடுத்த உடுப்புடன் உணவிற்கு பெரிதும் கஷ்டப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொது அமைப்புகள்எதுவும் இவர்களுக்கு உதவிகள் வழங்கியதாக நேற்று வரையில் தகவல் இல்லை.

பாதிக்கப்பட்ட மக்களை வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்துவதில் தனியார் பேருந்துகள் வடபிராந்திய போக்குவரத்துச்சபை பஸ்கள் லொறிகள் போன்றன ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

யுத்தகளத்தில்--

பியுமான டக்ளஸ் தேவானந்தா ஐ. சி. ஆர். சி உயர் அதிகாரிகளுடனும், இராணுவ உயர் அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மூன்று சடலங்களையும் மீட்டெடுப்பது தொடர்பாக யுத்த களத்தில் இருக்கும் விடுதலைப் புலிகளுடன் இன்று தொடர் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

புத்தாண்டு தினத்தை ஒட்டிகொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

(முழுவடு)

எதிர்வரும் புதுவருடத்தையொட்டி கொழும்பு நகரினதும் அதன் சுற்றாடல் பகுதியினதும், பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

புதுவருடத்தையொட்டி விடுதலைப் புலிகள் தாக்குதல்களை தீவிரமடையலாம் என்பதாலேயே இப்பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு ஏற்பாடுகளை முன்னிட்டு பாதுகாப்புப் படையினரினது லீவுகள் யாவும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (வ)

இருதரப்பினரும்---

இவ்வாறு சர்வதேச செஞ்சிலுவைச்சங்க யாழ் வதிவிடப்பிரதிநிதி நோப்றோபின் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது.

தற்போதய யுத்தசூழ்நிலையால் இடம் பெயர்ந்து பருத்தித்துறை மற்றும் பாண்டியன்தாழ்வுப் பகுதிகளிற்கு வந்துள்ள மக்களுக்கு உணவு தவிர்ந்த ஏனைய உதவிகளை செய்துவருவதாகவும் இந்நிலைமை தொடரும் பட்சத்தில் கொழும்பில் உள்ள தலைமையகத்துடன் தொடர்புகொண்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க விருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-03)

பளையில்---

உடன் மேற்கொள்ளுமாறு வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் பொதுமுகாமையாளர் எஸ்.சொக்கலிங்கம் வடபகுதி இராணுவத்தளபதியிடம் கோரியுள்ளது.

இதேவேளை யாழ். சிவில் நிர்வாக அதிகாரி திலகரட்ணா, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கவதிவிடப பிரதிநிதி, யாழ்.அரச அதிபர் ஆகியோரையும் அவர் சந்தித்து நிலைமைகளை எடுத்துக் கூறினார்.

நேற்றைய தினம் பளையில் தங்கியுள்ள ஊழியர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவர்களின் பாதுகாப்பு நிலைகளைத் தாம் கேட்டறிந்ததாகவும், அவர்களின் உணவுத்தேவைகளுக்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதாகவும் திரு. சொக்கலிங்கம் தெரிவித்தார். (ந)

உள்ள---

தங்கியுள்ள 200 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் ஆயிரம் பேருக்கு இன்று சமைத்த உணவு வழங்குவதற்கு சாவகச்சேரி பிரதேச செயலர் திரு. பு. சுந்தரம்பிள்ளை ஏற்பாடுகள் செய்துள்ளார்.

இதேவேளை பளை உதவி அரசாங் அதிபர் திரு. எஸ். புத்திசிகாமணி யாழ். செயலக திட்டமிடல் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு உலர் உணவுப் பொருட்களை பெற்று கொடிகாமத்தில் வைத்து விநியோகம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ். சுந்தரலிங்கம் வலம்புரி செய்தியாளரிடம் தெரிவித்தார். (வ)

இன்று விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நுகர்வோர் பாதுகாப்புச் சபை விசேட கூட்டம் இன்று மாலை 4 மணிக்கு 19, அரசடி வீதி, வண்ணார்பண்ணையில் நடைபெறவுள்ளது. (வ)

மூவர். . .

(வயது 26) நேற்றுக்காலை கைது செய்யப்பட்டதாகவும் அவர்களின் உறவினர்களால் யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச-03)

உயிரிழந்த---

(சின்னத்துரை அரவிந்தன் யாழ்ப்பாணம்)

வீரவேங்கைகளான

★ வர்ணன்/கீதன்
(ஸ்ரீகணகநாதன் நிமலன் யாழ்ப்பாணம்)

★ இசைப்பொழிலன்
(வில்வராஜா உதயதாஸ் யாழ்ப்பாணம்)

★ இன்பன்
(பாலசுந்தரம் சுதாகரன் வவுனியா)

★ சிதம்பரம்
(கைலாசவாசன் ஜனகிராமன் யாழ்ப்பாணம்) (வ-ச)

ராணுவ --

இதேவேளை பளைப்பகுதியில் தொடர்ந்தும் மோதல்கள் இடம்பெற்றுவருவதாகவும் கண்டி வீதியில் உள்ள புலிகளை அங்கிருந்து அகற்றப் படையினர் முயன்று வருவதாகவும் தெரிய வருகின்றது.

கிளாலியில் தரையிறங்க முற்பட்ட புலிகளை தாம் பின் வாங்கச் செய்துவிட்டதாகவும், வத்திராயன் பகுதியிலும் இதேபோல் தரையிறங்க முற்பட்ட புலிகளை விரட்டியடித்ததாகவும் படையினர் அறிவித்துள்ளனர்.

28 ஆம் திகதி நள்ளிரவிலிருந்து நேற்று வரைஇரண்டு அதிகாரிகளும் பதினொரு படையினரும் கொல்லப்பட்டுள்ளதாகவும் 9 அதிகாரிகளும் 54 பயினரும் காயமடைந்தும் 83 இராணுவத்தினர் சிறு காயங்களுக்குள்ளானதாகவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

பளையின் ஆனை விழுந்தான் பகுதியில் விடுதலைப் புலிகளை விரட்டுவதற்கு எடுத்த இராணுவ முயற்சி பூரண வெற்றி பெறவில்லை என்றும் அரசு தரப்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (43-52வ-ச)

மிகக் குறைந்த கட்டணம், தரமான சேவை

வலம்புரியில் எந்நேரமும் நீங்கள் விளம்பரம் செய்ய இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

வலம்புரியின் விளம்பர முகவர்

சிற்றிரெலிக்கொம் அன்ட் கொம்பியூட்டர் சேவை

இல: 11, பரமேஸ்வராச் சந்தி
திருநெல்வேலி

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல, 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

31ம் நாள் நினைவஞ்சலி

அமரர்

ஸ்ரீபன் கிருஷ்ணபிள்ளை

எமது பாடசாலை ஆசிரியர் திரு. கி. ஜோசப் அனுரா அவர்களின் தந்தையார் அமரர் ஸ்ரீபன் கிஷ்ணபிள்ளை அவர்கள் இறைபதமடைந்த 31 ஆம் நினைவு நாளாகிய இன்று எமது இதய அஞ்சலியைத் தெரிவித்து நிற்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/புனித மரியாள் வித்தியாலயம்
[ஒ, எல், ஆர்]

சி-154